

## Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் ஜெபத்தினால் தேவன் செய்த மகத்தான காரியம்!

### பெயர் சொல்லி அழைக்கப்பட்டு தீர்க்கதரிசனமாக கூறிய வார்த்தையின்படி வங்கி மேலாளர் பணி கிடைத்தது!



நான் கடந்த ஏப்ரல் 2017ஆம் ஆண்டு குண்டூரில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் கலந்துகொண்டேன். ஜெப வேளையின் போது Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் என்னுடைய பெயரை சொல்லி அழைத்து **"கர்த்தர் உன்னுடைய வாழ்க்கையை உயர்த்தப் போகிறார் என்று மூன்று முறை கூறினார்கள்"** நான் அப்பொழுது எனது பெயரை உடையவர்கள் அதிகம்பேர் இருப் பார்கள், நிச்சயமாக இது நானாக இருக்காது என்று நினைத்தேன். இந்நிலையில் மீண்டும் சகோதரன் என் பெயரை சொல்லி அழைத்து **"குமார், உன்னுடைய முழு பெயர் ராஜ்குமார்"** என்றார்கள். அந்த ஷணமே பரிசுத்த ஆவியானவரின் வல்லமை என்மேல் இறங்கியது. கூட்டம் குளிர்சாதன அறையில் நடந்தபோதிலும் நான் வியர்வையால் நனைந்தேன். என்னுடைய அவிசுவாசத்தை கர்த்தரிடம் அறிக்கையிட்டு தேவனிடம் மன்னிப்புக் கேட்டேன். பிறகு தனி ஜெப வேளையில் சகோதரரை சந்திக்கும்போது என் சாட்சியை கூறி ஜெபித்துச் சென்றேன். 2018-ம் ஆண்டு நான் IBPS RRB Exam எழுதினேன். **அந்த தேர்வில் நான் உதவி மேலாளராக கர்நாடகா கிராமின் பேங்கில் (Karnataka Gramin Bank) தேர்வானேன். அக்டோபர் 2019லிருந்து நான் வங்கியில் உதவி மேலாளராக (Assistant Manager) பணியாற்றி வருகின்றேன்.** என்னை பெயர் சொல்லி அழைத்து ஆசீர்வதித்த மகிமையின் தேவனை துதிக்கின்றேன்.

- திரு. ராஜ்குமார், ஓங்கோல்

### கொரோனாவிலிருந்து மீண்டு வர இரக்கம் செய்த வல்லமையின் தேவன்

**நீ தேவனுக்கு ஸ்தோத்திரபலியிட்டு, உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் சொல்லி;**
**ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன்,**
**நீ என்னை மகிமைப்படுத்துவாய் – சங்கீதம் 50:14, 15**

பயங்கரமான கொரோனாவால் மிகவும் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான மக்கள் Dr.ஆனந்த ஸ்திரா மற்றும் அவர்கள் குடும்பத்தாரிடத்தில் செய்துகொண்ட ஜெபத்தை கர்த்தர் கேட்டார். அதின்படி வெர்ஜீனியா என்னும் சகோதரி கொரோனாவால் பாதிக்கப்பட்டு மிகவும் அவதிக்குள்ளானார். அவருக்கு மூன்று குழந்தைகள். இரண்டாவது பிரசவத்தில் கர்த்தர் இரண்டு குழந்தைகளை அவருக்குக் கொடுத்தார். குழந்தைகள் பிறந்த இரண்டு மாதங்களில் தாய் கொரோனாவால் பாதிக்கப்பட்டார்கள். இதனை அறிந்த அவர்கள் மாமியார் சகோதரனோடு தொடர்புகொண்டு ஜெபித்துக் கொண்டார்கள். ஜெபித்தபடியே வெர்ஜீனியா சகோதரி இயேசுவால் பரிபூரண சுகமடைந்தார்கள். மேற்கூறிய வசனங்களின்படி அவர்களது பொருத்தனை காணிக்கைகளை அன்பரின் ஊழியத்திற்கும், **SJ Saves Trust Rural Hospital**-க்கும் கொடுத்துள்ளார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

அதேபோல, ஹார்ஷன் என்னும் வாலிப சகோதரன் கொரோனாவால் பாதிக்கப்பட்டு மிகவும் ஆபத்தான கட்டத்திற்கு தள்ளப்பட்டார். அவருடைய சகோதரிகளான பிரசன்னா மற்றும் பிரியங்கா Dr.ஆனந்த ஸ்திரா அவர்களை தொடர்புகொண்டு ஜெபித்துக்கொண்டார்கள். கடந்த ஆண்டு இந்த அன்பு பிள்ளைகள் தங்கள் தகப்பனை கொரோனாவால் இழந்துள்ளனர். சகோதரன் ஹார்ஷனும் இறந்து விடுவாரோ என்று கவலைப்பட்டனர். அந்த நிலையில் ஐயா அவர்களின் ஜெபத்தை கேட்ட இரக்கத்தின் தேவன் ஹார்ஷன் பூரண சுகமடைய கிருபை செய்தார். சகோதரிகள் தாங்கள் செய்து கொண்ட பொருத்தனையின்படி ஊழியத்தை தாங்கினார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!



## Rev. Dr. A. ஜாஷ்வா அவர்களது ஜெபத்தின் மூலமாக மகிமையின் தேவனிடமிருந்து அற்புதங்களை பெற்றவர்களின் சாட்சிகள்

### பணியிலிருந்த நெருக்கடியை மாற்றின தேவன்

நாங்கள் தஞ்சாவூரில் குடும்பமாக வசித்து வருகிறோம். திருச்சியில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வந்தேன். சற்றும் எதிர்பாராத சூழ்நிலையில் **என்னை மும்பைக்கு பணியிடமாறுதல் செய்வதாக சொன்னார்கள்.** அலுவலகத்தில் சில பிரச்சனைகள் நிமித்தமும், நான் மனம் சோர்ந்து போய், வேலையை ராஜினாமா செய்யக் கூடிய நிலையில் இருந்தேன். அந்த நேரத்தில் திருச்சியில் நடைபெற்ற அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு நாங்கள் குடும்பமாக வந்து கலந்து கொண்டோம். Rev.Dr.A.ஜாஷ்வா அவர்களை கூட்டத்தின் முடிவில் சந்தித்து என் சூழ்நிலையை சொன்னேன். **பாஸ்டர் அவர்கள் எனக்காக பாரத்துடன் ஜெபித்து, சில ஆலோசனைகளை வழங்கினார்கள். நானும் அதன்படி செயல்பட்டேன். என்ன ஆச்சரியம்! கர்த்தர் எனக்கு மனமிரங்கி வேலையை நான் ராஜினாமா செய்யாதபடி காத்து, மீண்டும் திருச்சியிலேயே பணி செய்யும்படியாக உதவி செய்தார்.** கர்த்தர் என் வாழ்வில் செய்த இந்த அதிசயமான செயலுக்காக கர்த்தரை துதிக்கிறேன். எனக்காக பாரத்துடன் ஜெபித்து ஆலோசனை வழங்கிய Rev.Dr.A. ஜாஷ்வா அவர்களுக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்து, ஊழியத்திற்கு **Rs.15,000/-**ஐ காணிக்கையாக தருகிறேன்.

- திரு. ஜோசப் லூர்து சேவியர், தஞ்சாவூர்

### அலைக்கழிப்பின் ஆவியிலிருந்து அற்புத விடுதலை தந்த தேவன்



என்னுடைய மகள் குடும்பத்தினர் புதியதாக வீடு கட்டி அதிலே வசிக்கும்பொழுது சமாதானம் இல்லாமல் இருந்தார்கள். காரணம் **அந்த வீட்டில் பலவிதமான பிசாசின் தொல்லைகள், வலு சர்ப்பத்தின் ஆவி அவர்களை அலைக்கழித்த படியால் பயத்திலும், திகிலிலும் இருந்தார்கள்.** இந்த சூழ்நிலையில் தாம்பரத்தில் நடைபெற்ற உங்கள் விடுதலையின் நாள் கூட்டத்தில் நானும் எனது மகளும் கலந்துகொண்டு Rev.Dr.A.ஜாஷ்வா அவர்களிடம் இந்த பிரச்சனையை சொல்லி ஜெபித்துக்கொண்டோம். **பாஸ்டர் அவர்கள் ஜெபித்த பிறகு அந்த வீட்டில் அலைக்கழிப்புகள் ஒழிந்தது, இப்பொழுது சமாதானத்துடன் வாழ்கிறார்கள்.** பூரண விடுதலையை கொடுத்த தேவனை நன்றியுடன் துதிக்கிறோம்.

- திருமதி. பிரேமா Tr., சென்னை

### ஜெப எண்ணெயால் பெற்ற பரிபூரண சுகம்



நான் இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருக்கும் பொழுது கீழே தவறி விழுந்துவிட்டேன். **பலத்த அடிபட்டு இரத்தம் அதிகமாக வெளியேறிவிட்டது. உதவி செய்ய யாரும் பக்கத்தில் இல்லாத நிலையில் மெதுவாக வீடு வந்து சேர்ந்தேன். அந்த நேரத்தில் உங்கள் விடுதலையின் நாள் கூட்டத்தில் வாங்கிச் சென்ற ஜெப எண்ணெயை ஜெபத்துடன் காயம்பட்ட இடத்தில் பூசி வந்தேன். சில நாட்களில் பரிபூரண சுகமடையும்படி கர்த்தர் கிருபை செய்தார்.** தேவனுக்கே மகிமை

- திரு. சின்னப்பன், காஞ்சிபுரம் மாவட்டம்

# அன்பரின் ஊழியம்

மலர்:7 ◆ ஆகஸ்ட் 2021 ◆ இதழ் 8



## உங்கள் ஆசிரியரிடமிருந்து...

கிறிஸ்துவுக்குள் எனக்கன்பான வாசகர்களே!

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

கர்த்தராகிய தேவன் இம்மட்டும் நம்மை காத்து கடந்த ஏழு மாதங்களும் நம்மோடுகூட இருந்து சகல நன்மையினாலும் நம்மை நிரப்பினதற்காக நாம் அவருக்கு நன்றி செலுத்துவோம். ஒருவேளை நாம் நினைத்த பல காரியங்களை செய்ய முடியாத நிலைமையில் உலகத்தின் சூழ்நிலைகள் நம்மை தள்ளினாலும் நாம் ஒருபோதும் சோர்ந்துபோகாமல் கர்த்தராகிய தேவனுக்கு நன்றி உள்ளவர்களாய் இருப்போம். அவருடைய மறைவிற்குள் தங்கி அவரைப் போலவே வாழ முயற்சிப்போம். இந்த வருட துவக்கத்திலிருந்து எத்தனையோ மரணங்களையும், பலவிதமான போராட்டங்களையும் சந்தித்த உங்கள் அனைவரையும் தேவன் நினைவுகூர்ந்து ஆசீர்வதித்து உயர்த்துவாராக. தீர்க்கதரிசியாகிய ஆபகூக் **"கர்த்தாவே, வருஷங்களின் நடுவிலே உம்முடைய கிரியையை உயிர்ப்பியும், வருஷங்களின் நடுவிலே அதை விளங்கப் பண்ணும்; (ஆபகூக் 3:2)** என்று ஆபகூக் கூறியதை போல நாமும் ஜெபிப்போம்.

உங்கள் அனைவரையும் மிகத் தாழ்மையோடு விரும்பிக் கேட்டுக்கொள்வது என்னவெனில் **இந்த கொடிய காலங்களில் நம்மைப் போன்ற இயேசுவை பின்பற்றும் சகோதர, சகோதரிகளுடைய பாதுகாப்பிற்காகவும், சுகத்திற்காகவும், விடுதலைக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.** ஏனெனில் அநேக நாடுகளில் சுதந்தரம் பறிக்கப்பட்டு மிகுந்த போராட்டங்களினோடே நடக்க வேண்டிய கட்டாயத்தில் நம்முடைய சகோதரர்கள் இருக்கிறார்கள். கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையை மறவாமல் ஒவ்வொரு நாளும் நமது ஜெபங்களில் நினைவுகூறுவோம்.

கடந்த மாதத்திலும் நம்மால் இயன்ற அளவிற்கு நாம் Zoom மீட்டிங் மூலமாக ஜனங்களை சந்தித்து ஜெபித்தோம். எங்களது அருமை மகனும், தாயாரும் பாடின பாடல்களை யுடியூப் மற்றும் நமது வலைதளங்களில் வெளியிட கர்த்தர் கிருபை செய்தார். அவற்றை கண்டு தேவனை ஸ்தோத்தரியுங்கள். அநேகருடன் அதை பகிருங்கள்.

கர்த்தருக்கு சித்தமானால் இந்த மாதத்தில் நடக்க இருக்கிற எல்லா தனி ஜெபங்களிலும் கலந்து கொள்ளுங்கள்.

ஆசிரியர் / வெளியிடுபவர்: **Dr. ஜேன் ஜாஷ்வா**

| சந்தா விபரம் | | | |
|---|---|---|---|
| இந்தியா | : | ஆண்டு சந்தா ரூ.200/-. | ஆயுள் சந்தா ரூ.2,000/-. |
| வெளிநாடு | : | ஆண்டு சந்தா ரூ.1,500/-. | ஆயுள் சந்தா ரூ.15,000/-. |

அவசர ஜெப உதவிக்குத் தொலைபேசி எண்கள்: **(0431) 2765386, 2765952, 2760603, 2760604, 2760605** (24 மணி நேரமும்)

**Telugu & Hindi** : 99445 36343, **Malayalam** : 94889 32937, **Kannada** : 90031 17205

e-mail: **info@mojindia.org** website: **www.ministryofjesus.in**

முகவரி:- அன்பரின் ஊழியம், 40, S.P.K. தெரு, உறையூர், திருச்சி – 620 003. Address:- Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003.

**திருச்சிக்கு வந்து எங்களை தனியாக சந்திக்க வேண்டும் என்போர் முன்பாகவே எங்கள் அலுவலகத்தை தொடர்பு கொண்டு முன்அனுமதி பெற்று வரவும்.** இக்கொடிய காலத்தில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள அநேக பாஸ்டர்களுக்கு நாம் உதவி செய்துள்ளோம். அதற்கு தாராளமாய் கொடுத்த உங்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறோம். தொடர்ந்து இப்படிப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதற்கு உங்கள் ஆதரவு கரம் தேவை.

**SJ Saves Trust மூலமாக ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் சுமார் 585 ஏழை எளிய மாணவர்களுக்கு பல்வேறு உதவிகள் செய்தோம்.** குறிப்பாக அவர்கள் நோய் எதிர்ப்பு சக்திக்கு தேவையான விட்டமின் மருந்துகள் கொடுக்கப்பட்டது. அதன் விவரங்கள் உள்ளே வெளியிட்டுள்ளோம். மேலும், நம்முடைய இந்திய தேசம் சுதந்தரம் பெற்ற காலகட்டத்தில் இருந்த அத்தனை ஆசீர்வாதமான காரியங்களும் தொடர்ந்து இருக்க ஜெபம் செய்யுங்கள். எங்களது அனைத்து தொலைக்காட்சி நிகழ்ச்சி களையும் பாருங்கள். விசேஷமாக வாலிப பிள்ளைகளை பார்க்க சொல்லுங்கள்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு அரசாங்க நெறிமுறைகளுக்கு உட்பட்டு ஜூலை 31ம் தேதி திருச்சியில் பங்காளர்கள் சந்திப்பு மற்றும் ஜெபம் நடைபெற்றது. அநேக பங்காளர்கள் எங்களை சந்தித்து ஜெபித்துக்கொண்டார்கள். பங்காளர்கள் ஒவ்வொருவரையும் நேரில் சந்தித்தது எங்களுக்கு அதிக மகிழ்ச்சியை தருகின்றது. **ஆகஸ்ட் 14ம் தேதி நாகர் கோவிலில் பங்காளர்கள் சந்திப்பு நடை பெறுகிறது.** அந்நாளில் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின் றோம்.

**நமது ஜெப ஸ்தல பராமரிப்பு பணிகள் சீக்கிரம் துவங்க வேண்டும். அதற்கு சுமார் இருபது லட்சத்திற்கும் மேல் செலவாகும். ஜெபியுங்கள், உங்களால் இயன்ற அளவு தாங்குங்கள்.** தேவனுடைய ஆலயப் பணிக்கு தருகின்ற உங்கள் தேவைகளை கர்த்தர் நிச்சயம் சந்திப்பார். தேவனிடமிருந்து அற்புதங்களை பெற்றுக்கொள்வீர்கள்.

இந்த மாதத்திலும் கர்த்தர் உங்களுடைய ஏக்கங்களை எல்லாம் நிறைவேற்றி உங்கள் ஜெப விண்ணப்பங்களுக்கு பதில் தருவார். சோர்ந்து போகாதிருங்கள் எங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

**இம்மாத வாக்குத்தத்தம்**

**ஆபகூக் 3:2**
**எசேக்கியேல் 16:6**
**சங்கீதம் 10:17**
**1யோவான் 2:17**

## இதயம் தொட்ட எண்ணம்

**Obedience to God's will Is facilitated through the Holy Spirit, our coach.**

**தேவ சித்தத்திற்கு நாம் கீழ்ப்படிய, நமக்கு உதவுவது நம் பயிற்சியாளராகிய பரிசுத்த ஆவியானவர்.**

கிறிஸ்துவின் பணியில்
**Dr. ஜேன் ஜாஷ்வா**

## ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புகிறவர்கள் கீழ்க்காணும் மூன்று வங்கிக் கணக்குகளில் அனுப்பலாம்

| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| Account No. | Account No. | Account No. |
| 10848469699 | 10848559426 | 10848474869 |

**State Bank of India, Cantonment, Trichy Main Branch**
**IFS Code : SBIN 0000930**

மேற்கண்ட வங்கியின் மூலமாக நீங்கள் காணிக்கை அனுப்பிய உடன் எங்களது Cell No : 95004 87061 என்ற எண்ணிற்கு காணிக்கை அனுப்பிய விவரத்தை கூறலாம். அல்லது SMS மூலம் தெரிவிக்கலாம்.

**உங்கள் காணிக்கைகளை அனுப்ப மேலும் ஒரு எளிய வழி**

← இந்த QR Code – ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது Cell No : 95004 87061 என்ற எண் மூலமும் அனைத்து பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் (Google pay, Paytm, PhonePe etc.,) மூலமாகவும் எங்கள் மேற்கண்ட வங்கிக் கணக்குகளுக்கு காணிக்கை அனுப்பலாம்.

## அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம் (Renovation) புதுப்பித்தல் பணிகள்

உங்கள் அனைவருக்கும் தெரிந்தபடி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம் கட்டி முடிக்கப்பட்டு 8 வருடங்கள் ஆகிறது. இதுவரைக்கும் நாம் எந்த பராமரிப்பு பணிகளும் அதில் செய்யவில்லை. குறிப்பாக ஆரம்பத்திலிருந்தே நாம் சில வேலைகளை நிலுவையில் வைத்துள்ளோம். அவை அனைத்தும் கண்டிப்பாக இந்த வருடத்தில் நாம் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். ஏனெனில் ஜெப ஸ்தலத்தில் அநேக இடங்களில் பழுது ஏற்படுகின்றது. நாட்கள் செல்ல செல்ல அது அதிகரித்து விடலாம். எனவே இந்த பராமரிப்பு பணிகளுக்கு உங்கள் உதாரத்துவமான நன்கொடைகளை, உதவிகளை அனுப்பிடுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தேவனுடைய ஜெப ஸ்தலத்தை நீங்கள் பராமரிக்கும் பொழுது கர்த்தர் உங்களுடைய குடும்பத்தையும் ஆசீர்வதித்து பெருகச் செய்வார்.

( Rs.20,000/- கொடுக்கக் கூடிய 100 நபர்கள்)

**தேவைப்படுகின்ற தொகை – Rs.20,00,000/-**

இப்பொழுது நமது வெப்சைட்டிலும் உங்கள் உதாரத்துவமான காணிக்கைகளை அனுப்பலாம்.

**ministryofjesus.in-donate**

# காலத்தின் அதிபதி
# (The Ruler of Time)



தேவ செய்தி : Rev.Dr.A. ஜாஷ்வா

கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமான அன்பரின் ஊழிய பங்காளர்கள் மற்றும் பத்திரிக்கை வாசகர்களுக்கு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இக்கட்டான, நெருக்கமான காலங்களில் கர்த்தருடைய வல்லமையும், பராக்கிரமமுள்ள கரம் உங்களை அற்புதமாக வழி நடத்தி வருவதை நினைத்து கர்த்தரை துதிக்கின்றேன். தொடர்ந்து கர்த்தர் உங்களை நடத்துவாராக!

அன்பான சகோதர, சகோதரிகளே! இந்த மாதம் உங்கள் யாவரையும் கர்த்தருக்குள் திடப்படுத்த, ஸ்திரப்படுத்த கர்த்தர் கொடுத்த தலைப்பைதான் மேலே நீங்கள் வாசித்தீர்கள். காலத்தை ஆளுகிறவர், காலத்தின் அதிபதி நம்முடைய கர்த்தர். உலகப்பிரகாரமாக ஆளுகை செய்ய அநேக காரியங்கள் உள்ளது. ஆளுகை செய்கிற அநேக மனிதர்கள் இருக்கிறார்கள். ஆனால் **இன்றைக்கு மட்டுமல்ல என்றென்றும் காலத்தை ஆளுகிறவர், காலத்தின் அதிபதி நம்முடைய ஆண்டவர் இயேசு கிறிஸ்து மாத்திரமே!** அவரே காலங்களை ஆளுகிறவர். இப்படிப்பட்ட காலத்தின் அதிபதியாக இருக்கிறவர் எக்காலத்திலும் இருக்கிறவராக இருக்க வேண்டும். இன்றைக்கு நாம் இருக்கலாம், நாளைக்கு இந்த உலகத்தை விட்டு கடந்து செல்லலாம். ஆனால் எக்காலமும் இருக்கிற ஒரு நபராக அந்த ஆளுகிறவர் இருக்க வேண்டும். கடந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் என மூன்று காலங்களிலும் அவர் செயல்படுகிறவராக இருக்க வேண்டும்.

அன்பான வாசகர்களே! பக்தன் மோசேக்கு தேவன் அழைப்பை கொடுக்கும் பொழுது முட்செடியிலிருந்து பேசினார். முட்செடியிலிருந்து அழைப்பை பெற்றுக் கொண்ட மோசேயிடம் **"நீ எப்படி அடிமைத் தனத்தில் இருக்கிற ஜனங்களை மீட்டெடுக்க வேண்டும்"** என்ற காரியங்கள் எல்லாவற்றையும் தேவன் சொன்னார். கடைசியில் மோசே கர்த்தரிடம் **"ஆண்டவரே! நான் பார்வோனிடம் போய் இக்காரியங்களை சொல்லும்பொழுது பார்வோன் கேட்பான், எந்த நாமத்தில் இங்கு வந்தாய், யார் உன்னை அனுப்பினது என்று கேட்டால் நான் என்ன சொல்வது"** எனக் கேட்ட பொழுது **"நான் இருக்கிறவராகவே இருக்கிறேன்"** என்று சொல் என்றார். அப்படி என்றால், இதை நாம் ஆழமாக சிந்தித்துப் பார்க்கும் பொழுது இவர் காலத்தால் மாறுபடுகிறவர் அல்ல. காலத்தின் அதிபதியாக இருக்கிறபடியால்தான் **"இருக்கிறவராகவே இருக்கிறேன்"** என்கிறார். **ஆதியிலே எப்படி இருந்தாரோ, அப்படித்தான் இப்பொழுதும் இருக்கின்றார். இப்பொழுது எப்படி இருக்கிறாரோ, அப்படியேதான் எப்பொழுதும் இருப்பார். அவர் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர் என்று வேதம் அவரைக் குறித்து தெளிவாக கூறுகிறது (எபிரெயர் 13:8).** காலத்தை ஆளுகை செய்வதற்கு எந்த ஒரு மனிதனுக்கும் அதிகாரம் இல்லை. அது கர்த்தருடைய கரத்தில் மாத்திரமே இருக்கிறது. மனிதன் காலத்தை ஆள முடியாது. அதனால் தான் ஒருமுறை மதத் தலைவர்களை பார்த்து

இயேசு **"மாயக்காரரே பூமியின் தோற்றத்தையும், வானத்தின் தோற்றத்தையும் நிதானிக்க உங்களுக்குத் தெரியுமே, இந்தக் காலத்தையோ நிதானியாமற் போகிறதென்ன?"** எனக் கேட்கிறார். **(மத்தேயு 16:3; லூக்கா 12:56)** இதன் பொருள் என்ன? **காலத்தை ஆளுகிற எந்த ஆளுமையையும் கர்த்தர் மனிதனுக்கு கொடுக்கவில்லை.** இருக்கிறவராகவே இருக்கிறேன் என்றவரே இந்த காலத்தின் அதிபதியானவர் காலத்தை ஆளுகிறவர், அவர் காலத்தை தம்முடைய ஆளுகைக்குள் வைத்திருக்கிறார் என்பதை நாம் புரிந்துகொள்ள முடிகின்றது.

நேரம் அல்லது காலம் என்று சொல்லும் பொழுது ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு காலமுண்டு. சாலொமோன் ஞானி தனது வாழ் நாளின் பின் பகுதியில் பிரசங்கி என்கிற புத்தகத்தை எழுதினார். அதில் **"ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு; வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு" என பிரசங்கி 3ஆம் அதிகாரம் 1ம் வசனம் முதல் 8ம் வசனம் வரை சொல்லப்பட்டிருக்கிறது.**

இப்படி ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு காலம் இருக்கிறது என்றால் அந்த காலத்தை உருவாக்கியவர், ஆளுகை செய்கிறவர் கர்த்தர் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அதினதின் காலத்தில் நேர்த்தியாய் செய்கிறவர் தேவன் மாத்திரமே.

**அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்;**
**- பிரசங்கி 3:11** (a)

**நீதி. 27:1ல் "ஒரு நாள் பிறப்பதை அறியாயே"** என வாசிக்கிறோம். புதிய நாள் பிறப்பது தேவனால் தான், அவரது கிருபை, இரக்கத்தினால் தான். **யாத்திராகமம் 9:5ம்** வசனத்தில் **"கர்த்தர் ஒரு காலத்தை குறித்தார்"** என எழுதப்பட்டுள்ளது. அப்படி என்றால் கர்த்தர் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஒரு காலத்தை குறித்திருக்கிறார். ஒவ்வொருவருக்கும் ஒரு நேரத்தை குறித்துள்ளார். இவை எல்லாம் தேவனுடைய கரங்களில்தான் இருக்கிறது.

அன்பானவர்களே! இந்த காலம், நேரம் என்பதனை குறித்து நாம் தெளிவாக சிந்திக்க வேண்டும். காலத்தை குறிக்கிறவர் தேவன், உங்களுடைய காலத்தை நடத்துகிறவர் தேவன்தான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அதனால்தான் ஆபகூக் தீர்க்கதரிசி **"குறித்த காலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப் பட்டிருக்கிறது! முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது! அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு, அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை" (ஆபகூக் 2:3)** எனக் கூறுகிறார். ஆம் சகோதரனே! சகோதரியே! உங்களுடைய வாழ்க்கையிலும் கர்த்தர் ஒரு தரிசனத்தை வைத்திருக்கிறார், அது தேவன் குறித்துள்ள காலத்தில் செயல்பாட்டிற்கு வரும், **குறிக்கப்பட்ட காலத்திற்காக அந்த தரிசனம் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த காலம் வந்தவுடனே அது நிச்சயம் நிறைவேறும். நாம் அநேக சமயங்களில் கர்த்தருடைய நேரத்தை பார்ப்பதில்லை. நம்முடைய நேரத்தைதான் பார்க்கிறோம். காலத்தின் அதிபதி நாம் அல்ல, கர்த்தர் தான்.** அதை நீங்கள் புரிந்து கொண்டீர்கள் என்றால் அவருடைய நேரத்திற் காக நிச்சயம் காத்திருப்பீர்கள். இன்றைக்கு நிறைய காரியங்கள் நம்முடைய வாழ்க்கையில் செயல்படாமல் போவதற்கும், தடைபடுவதற்கும் காரணம் காலத்தை நாம் கையில் எடுத்துக் கொள்கிறோம். காலத்திற்கு ஏற்றாற் போல நாம் மாறிப் போய்விடுகிறோம். காலத்தின் அதிபதி ஒருவர் இருக்கிறார், அவர் ஆளுகை செய்கிறவர்; அவர் எனக்கு குறிக்கப்பட்ட காரியத்தை நிறைவேற்றி கொடுப்பார் என்பதை மறந்து விடுகிறோம். சங்கீதக்காரன் மிக அழகாக **"எனது காலங்கள் உமது கரத்திலிருக்கிறது" (சங்கீதம் 31:15)** எனக் கூறுகிறார். இந்த வார்த்தையை நீங்கள் என்றைக்கு சொல்ல ஆரம்பிக்கிறீர்களோ, அன்றிலிருந்து உங்கள் காலம் நல்ல காலமாக மாறிவிடும். ஏனென்றால் உங்கள் காலம் தேவனுடைய கட்டுப்பாட்டிற்குள்

இருக்கிறது. அவர் நிச்சயமாக சரியாக செய்வார், **எப்பொழுது என்ன செய்ய வேண்டுமோ அதை செய்வார். முன்பாகவும் அல்ல, பின்பாகவும் அல்ல சரியான நேரத்தில் அதை செய்வார்.** வேதத்திலே அநேக உதாரணங்களை இதற்கு சொல்லலாம். தேவ பக்தர்களுடைய வாழ்க்கையிலே நடந்த காரியங்கள் மூலம், எப்படி அவர்கள் வாழ்க்கையில் கர்த்தர் ஆளுகை செய்தார், காலம் எப்படி கர்த்தரால் அவர்களுடைய வாழ்க்கையில் முன் குறிக்கப்பட்டிருந்தது என்பதை தெளிவாக சொல்ல முடியும். அப்படிப்பட்டவர்களில் நான்கு நபர்களை குறித்து இச்செய்தியில் உங்கள் விசுவாசம் வளர, உறுதிப்பட விளக்க விரும்புகிறேன்.

## முதலாவது விசுவாசிகளின் தகப்பன் ஆபிரகாம், சாராள்

**ஆபிரகாம் முதிர்வயதாயிருக்கையில், சாராள் கர்ப்பவதியாகி, தேவன் குறித்திருந்த காலத்திலே அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள் - ஆதி. 21: 2**

தேவன் குறித்திருந்த காலத்தில் ஈசாக்கு பிறந்தான். அதற்கு முன்பும் பிறக்கவில்லை, பின்பும் பிறக்கவில்லை. இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். கர்த்தர் குறித்த காலத்தில் ஆபிரகாம் சாராளுக்கு ஒரு குமாரனை கொடுத்தார். இந்த அற்புதத்திற்காக அவர்கள் 25 ஆண்டுகள் காத்திருந்தார்கள். இன்றைக்கு நாம் 25 நிமிடம் கூட கர்த்திருக்க மனதில்லாதவர்களாக இருக்கிறோம். கர்த்தர் குறித்திருக்கிற காலம் எப்பொழுது நடக்கும் என்று நமக்கு தெரியாது. ஆனால் அது நடக்கும் என நம்ப வேண்டும், விசுவாசிக்க வேண்டும். ஆபிரகாமும், சாராளும் நம்பினார்கள், விசுவாசித்தார்கள். அது அவர்களுக்கு நீதியாக எண்ணப்பட்டது. இதன் மூலமாக காலத்தின் அதிபதி கர்த்தர் என்பதை நாம் அறிந்துகொள்ள முடிகிறது. ஆபிரகாமும், சாராளும் அந்த ஆசீர்வாதத்தை அனுபவித்தார்கள். இப்படி தான் ஒரு சீமானாக மாறுவேன் என்று ஆபிரகாம் நினைத்திருக்க மாட்டார். அவன் தன் இடத்திலிருந்து புறப்படும் பொழுது சில உறவினர்கள், வேலையாட்கள் மற்றும் மிருக ஜீவன்கள் இருந்தது. எல்லாரையும் அழைத்துக் கொண்டு வந்தான். மேலும் மேலும் விருத்தியாக முடியுமா? வேறு தேசத்திற்குள் போகிறேனே என இதை எல்லாம் அவன் யோசித்துப் பார்க்கும் பொழுது ஆபிரகாமிற்கு சற்று தயக்கமாகத்தான் இருந்திருக்கும். ஆனால் காலத்தை ஆளுகை செய்கிற அதிபதி அவர் வாழ்க்கையில் பெரிய காரியத்தை செய்தார். ஆபிரகாமை சீமானாய் மாற்றினார். மகா பிரபு என்று ஆபிரகாமை ஜனங்கள் அழைத்தார்கள் என வேதம் சொல்கிறது. காரணம் தேவன் குறித்திருந்த காலத்தில் வாக்குத்தத்தின் குமாரனாகிய ஈசாக்கை கொடுத்து அவன் மூலமாக சந்ததிகளை பெருகச் செய்தார், ஆசீர்வதிக்கப்படச் செய்தார்.

ஆம் ஆபிரகாம் - சாராளின் வாழ்க்கையில் காலத்தின் அதிபதி செய்த அற்புதத்தை விசுவாசிக்கிற உங்கள் காலத்தையும் அவர் கையில் கொடுங்கள். அப்பொழுது நிச்சயம் நீங்களும் தேவனால் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

## இரண்டாவது கனிதரும் திராட்சை செடி யோசேப்பு

யாக்கோபினுடைய 11வது குமாரன் யோசேப்பு. யோசேப்பின் வாழ்க்கை சரித்திரம் நமக்கு நன்கு தெரியும். ஆனாலும், சுருக்கமாக இரண்டு காரியத்தை உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன்.

**அப்பொழுது அவன்: நீ போய், உன் சகோதரருடைய ஷேமம் எப்படி என்றும், ஆடுகள் எப்படி இருக்கிறது என்றும் பார்த்து, எனக்கு மறுசெய்தி கொண்டுவா என்று அவனுக்குச் சொல்லி, எபிரோன் பள்ளத்**

**தாக்கிலே இருந்து அவனை அனுப்பினான், அந்தப்படியே அவன் சீகேமுக்குப் போனான் - ஆதி. 37: 14**

யோசேப்பு, ஆடுகள் எப்படி இருக்கிறது, சகோதரர்கள் ஷேமம் எப்படி என்று பார்க்க போகிறான். அப்படி சென்றவனை தூக்கி குழியில் போடும் பொழுது இவனுக்கு என்ன காலம் இருந்திருக்கும்.

**அவனை எடுத்து, அந்தக் குழியிலே போட்டார்கள்; அது தண்ணீரில்லாத வெறுங் குழியாயிருந்தது - ஆதி. 37: 24**

அவன் காலம் என்ன குழியில் போடு வதற்கு ஒரு காலம், குழியிலிருந்து எடுப்பதற்கு ஒரு காலம் என்று நாம் சுலபமாக சொல்லி விடலாம். ஆனால், **குழியில் தூக்கிப் போடும் பொழுது அவன் காலம் இருண்ட காலமாகத் தான் இருந்திருக்கும்.** குழியே இருளாகத்தானே இருக்கும். ஆனால், கர்த்தர் யோசேப்பிற்காக ஒரு காலத்தை குறித்தார். தரிசனம் அவனுக்காக வைக்கப்பட்டிருந்தது. எனினும் அடுத்த நிகழ்வாக

**ஆதி. 39:20ல்** பார்க்கும் பொழுது **யோசேப்பின் எஜமான் அவனைப் பிடித்து, ராஜாவின் கட்டளையால் காவலில் வைக்கப் பட்டவர்கள் இருக்கும் சிறைச் சாலையிலே அவனை ஒப்புவித்தான். அந்தச் சிறைச் சாலையில் அவன் இருந்தான்**

செய்யாத தவறுக்காக சிறைச்சாலையில் தூக்கிப் போடுகிறார்கள். அங்கே குழி, இங்கே சிறை. யோசேப்பு தவறு செய்யவில்லை. மாற்று தேசத்தில் இருக்கிறான். ஏதாவது நம்பிக்கை இருக்கிறதா? ஆனால் யோசேப்பிற்காக தரிசனம் வைக்கப்பட்டிருக்கிறது.

**பின்னும் பார்வோன் யோசேப்பை நோக்கி: பார், எகிப்து தேசம் முழுமைக்கும் உன்னை அதிகாரியாக்கினேன் என்று சொல்லி - ஆதி. 41:41** இந்த யோசேப்பு எகிப்திற்கே அதிபதியாகிறான் என சொல்லப் பட்டுள்ளது. இது தான் காலத்தின் அதிபதி தருகின்ற மகா பெரிய ஆசீர்வாதம். இது மிகவும் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. பார்வோனுக்கு முன்பாக யோசேப்பு நிற்கும் பொழுது 30 வயது என வேதம் சொல்கிறது.

**யோசேப்பு எகிப்தின் ராஜாவாகிய பார்வோனுக்கு முன்பாக நிற்கும்போது முப்பது வயதாயிருந்தான்; - ஆதி. 41: 46** (a)

சுமார் 15 வருடங்கள் யோசேப்பு கஷ்டப் பட்டிருக்கலாம் என தெரிகிறது. கிட்டத்தட்ட 15 ஆண்டுகளுக்கு மேலாக பல பாடுகளை கடந்து வந்த இந்த யோசேப்பு குறிக்கப்பட்ட காலத்திற்காக காத்திருக்கிறான். அந்த காலமும் வந்தது, எகிப்தின் அதிபதியாக தேவன் யோசேப்பை உயர்த்தினார்.

பிரியமான தேவ ஜனமே! இது தான் காலத்தின் அதிபதி செய்கின்ற அதிசயம். யோசேப்பினுடைய வாழ்க்கையில் எப்படிப் பட்டதான ஒரு அற்புதத்தை செய்தார். அது மிகவும் ஆச்சரியப்படத்தக்க ஒன்றாகும். அதே காலத்தின் அதிபதி, காலத்தை ஆளுகிறவர். உங்களுடனும் இருக்கிறார், உங்கள் காலங்கள் அவருடைய கரத்திற்குள் இருக்கும்பொழுது நீங்களும் யோசேப்பை போல ஆசீர்வதிக்கப் படுவீர்கள்.

## மூன்றாவது ஆடுகளை மேய்த்த தாவீது ராஜா

தாவீது ஒரு ஆட்டிடையன். ஆடு மேய்க்கிற தொழிலில் இருந்தவன். இப்பொழுது காலம் வருகிறது. சவுல் ராஜாவை கர்த்தர் அந்த சிங்காசனத்திலிருந்து தூக்கி வீசிவிட்டு, அடுத்த ராஜாவை அபிஷேகம் செய்யப் போகிறேன் என்று சாமுவேலிடம் கர்த்தர் சொல்லி விட்டார். எனவே சாமுவேலே, நீ ஈசாயின் வீட்டிற்கு போ, அங்கே அவன் பிள்ளைகளில் ஒருவனை அபிஷேகம் செய்ய வேண்டும் என்றார். ஈசா யினுடைய முதல் ஏழு பிள்ளைகள் வரிசையாக வந்தனர். அவர்கள் யாரும் அபிஷேகம் பண்ணப் படவில்லை. அவர்கள் வெளித்தோற்றத்துக்கு

நன்றாகத்தான் இருந்தார்கள், ஆனால் கர்த்தர் இருதயத்தை பார்க்கிறார். வெளித் தோற்றத்தை அவர் பார்ப்பதில்லை. ஏழு பேரை ஈசாய் வரச் சொன்னான். ஆனால் ஆடு மேய்க்கிறவனாக இருந்த தாவீதை அவன் தகப்பனே அழைக்க வில்லை. சாமுவேல் ஈசாயிடம் **"உன் பிள்ளைகள் எல்லாரையும் அழைத்து வா என்று தான் சொன்னான், ஆடு மேய்க்கிறவனை விட்டுவிட்டு மீதமுள்ள பிள்ளைகளை கூப்பிடு"** என்று சொல்லவில்லை. அப்படி சொல்லியும் ஈசாய் தாவீதை ஒரு பொருட்டாக எண்ணாமல், அழைக்காமல், ஆடு மேய்த்துக் கொண்டே இருக்கட்டும் என நினைத்தான். முதல் ஏழு பேரும் கடந்து போனார்கள். ஆனால் கர்த்தர் ஒருவரையும் தெரிந்ததெடுக்கவில்லை. என்ன இது! கர்த்தர் பொய் சொல்ல மாட்டாரே, இங்கு தானே அபிஷேகம் செய்வேன், இவர்களில் ஒருவனை தான் தெரிந்தெடுப்பேன் என்று சொல்லி அனுப்பினார். இதை சாமுவேல் மனதில் எண்ணியபடியே ஈசாயிடம் **"இன்னும் உனக்கு பிள்ளைகள் இருக்கிறார்களா? இவ்வளவுதானா"** என்று கேட்டான்.

**உன் பிள்ளைகள் இவ்வளவுதானா என்று ஈசாயைக் கேட்டான். அதற்கு அவன்: இன்னும் எல்லாருக்கும் இளையவன் ஒருவன் இருக்கிறான்; அவன் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிறான் என்றான்; அப்பொழுது சாமுவேல் ஈசாயை நோக்கி: ஆள் அனுப்பி அவனை அழைப்பி; அவன் இங்கே வருமட்டும் நான் பந்தியிருக்க மாட்டேன் என்றான்**

**- 1 சாமுவேல் 16: 11**

அதற்கு ஈசாய் இன்னும் ஒருவன் இருக்கிறான், அவன் ஆடு மேய்த்துக் கொண்டிருக்கிறான் என்றான். பரவாயில்லை அவனை கூப்பிடு என்றான். அவன் வீட்டு வாசலுக்கு வந்தும், வராமலும் கர்த்தர் **"இவன் தான் அபிஷேகம் செய்"** என்று சொன்னார். எப்படி இருந்திருக்கும் அந்த தகப்பனுக்கும், ஏழு சகோதரர்களுக்கும். கர்த்தர் தாவீதை அபிஷேகம் செய்துவிட்டார். இனிதான் நிகழ்ச்சிகளே ஆரம்பமாகிறது. என்ன நிகழ்வு, தாவீதின் வாழ்க்கையில் நெருக்கங்கள், சிக்கல்கள் உண்டாகிறது. ஆட்டு மந்தையில் இருக்கும் பொழுது ஒரு பிரச்சனையும் இல்லை. சிங்கம், புலி வந்தது. எல்லாவற்றையும் சமாளித்து விட்டான். இப்பொழுது அபிஷேகம் செய்த வுடன் முதல் வெற்றி கோலியாத்தை வீழ்த்தியது. அதற்கு பிறகு சவுலுக்கும், தாவீதுக்கும் தொடர்ந்து சண்டை வலுக்கிறது. எப்படியாவது தாவீதை கொன்றுவிட வேண்டுமென்று சவுல் தீர்மானத்துடன் அலைகிறான். அருமையான தேவ ஜனமே! எத்தனை வருடம் காடுகளிலும், புதர்களிலும் ஓடி ஓடி தாவீது ஒளிந்தான். எனினும் தாவீதிற்காக தரிசனம் வைக்கப் பட்டிருக்கிறது. கர்த்தருடைய காலத்திற்காக காத்திருந்தான். அவர் ஒரு காலத்தை குறித்து வைத்திருக்கிறாரே, அவருடைய நேரம் ஒன்று இருக்கிறதே, அதற்காக தாவீது ஓடினான். இதற்கு மேல் தாக்குபிடிக்க முடியுமா என்று தாவீது ஒருவேளை யோசித்திருக்கலாம். ஆனால் நாள் ஒன்று வந்தது. **"தாவீது ராஜாவானான்"**

**தாவீது ராஜாவாகும்போது, முப்பது வயதாயிருந்தான்; அவன் நாற்பது வருஷம் ராஜ்யபாரம் பண்ணினான் 2 சாமுவேல் 5:4**

தாவீது ராஜாவாகும்பொழுது அவனுக்கு 30 வயது. யோசேப்பு எகிப்துக்கு அதிபதியாகும் பொழுது அவனுக்கும் 30 வயது. அன்பானவர்களே! இப்படிப்பட்ட இந்த தாவீது 15 வருடமாவது பாடுபட்டிருப்பான். ஆடு மேய்த்துக் கொண்டிருந்தவன், அதற்குப் பிறகு கோலியாத்தை வீழ்த்தினான். கிட்டத்தட்ட யோசேப்பை போல தாவீதும் அதிக பாடுகளை அனுபவித்திருக்கிறான். ஆனால் குறித்த காலத்திற்காக காத்திருந்தான். கர்த்தர் அவனை இஸ்ரவேலின் ராஜாவாக உயர்த்தினார். அவனுடைய ராஜ்யபாரம் சிறப்பு மிக்க தாயிருந்தது.

## நான்காவதாக சவுல் என்னும் பவுல்

அப்போஸ்தலருடைய நடபடிகள் ஒன்பதாம் அதிகாரத்தில் ஒரு வாலிபனை குறித்து சொல்லப்பட்டிருக்கிறது. அவன் தான் சவுல்.

**சவுல் என்பவன் இன்னுங் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலைசெய்யும்படி சீறிப் பிரதான ஆசாரியரிடத்திற்குப்போய் - அப்போஸ்தலர் 9: 1**

இவனுடைய ஆரம்பமே ஒரு தீவிரவாதமாக இருந்தது. இவன் காலம் இப்படித்தான் இருந்தது. அப்படிப்பட்ட சவுலின் காலத்தை கர்த்தர் தலைகீழாக மாற்றினார். காலத்தின் அதிபதி, எங்கோ ஓடிக்கொண்டிருந்த அவனை தலைகீழாக மாற்றி அதே **9ம் அதிகாரம் 15ம்** வசனத்திலே **"அதற்கு கர்த்தர்: நீ போ, அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான்"** என்று கூறினார். யாருடைய நாமத்தை சொல்கிறவர்களை துன்பப்படுத்தினானோ அந்த நாமத்தை சொல்வதற்கு நான் தெரிந்து கொண்ட பாத்திரம் என்கிறார். குறித்த காலத்தில் சவுலை எப்படி பவுலாக மாற்றினார் பாருங்கள் அன்பான தேவ பிள்ளைகளே! அந்த குறித்த காலக்கட்டம் வரும்பொழுது பெயர் மட்டும் மாறவில்லை, வாழ்க்கையே மாறியது. காலத்தின் அதிபதி அவனை முற்றிலும் மாற்றி விட்டார். பவுல் அநேக நிருபங்களை எழுதியிருக்கிறான். பவுல் மூன்று மிஷனரி பயணங்களை மேற்கொண்டு சுவிசேஷத்தை சொல்லி இருக்கிறான். ராஜாக்களுக்கு முன்பாக, தேசாதிபதிகளுக்கு முன்பாக சுவிசேஷத்தை சொல்லி இருக்கிறான். புறஜாதிகளுக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும், அவன் சுவிசேஷம் அறிவித்து இருக்கிறான். ஆண்டவராகிய இயேசுவால் பவுல் மிகப் பெரிய பாக்கியத்தை பெற்றான். கர்த்தருடைய நேரத்தில் பவுலை கர்த்தர் வல்லமையாக பயன்படுத்தினார்.

**பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார் - அப். 19: 11**

அன்பு வாசகர்களே! நான்கு உதாரணங்களை வேதத்திலிருந்து எடுத்து கூறி விளக்கி உள்ளேன். ஆபிரகாம் சாராளை குறித்து, யோசேப்பு, தாவீது மற்றும் சவுல் பவுலாக மாறியதை குறித்து உங்களுடன் பகிர்ந்து கொண்டேன். இவர்களை எல்லாம் பார்க்கும் பொழுது இன்றைக்கு உங்களுடைய வாழ்க்கையை ஒப்பிட்டு பாருங்கள். உங்களுக்காகவும் குறித்த காலம் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. காலத்தை நீங்கள் புரிந்துகொள்ளுங்கள். அந்த காலத்தை ஆளுகை செய்கிறவர் யார் என்பதை அறிந்துகொள்ளுங்கள். அதனை அறிந்து கொள்ளும்பொழுது நிச்சயமாக உங்கள் வாழ்க்கையிலே இடர்வதற்கு வழியே இல்லை. அந்த நம்பிக்கை உங்களுக்குள்ளே இருக்கும். இன்றைக்கு நாம் பொல்லாத காலத்திற்குள்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். காலத்தின் அதிபதி நான்தான் என்று கர்த்தர் சொல்கிறார்.

பவுல் நிருபங்களை எழுதும் பொழுது **எபேசியர் 5:16; கொலோசெயர் 4:5ம்** வசனத்தில் **"நாட்கள் பொல்லாதவைகளானபடியால் காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்"** என்று கூறுகிறார். இந்த காலத்தை நம்பியும், உலகத்தை நம்பியும், உலக மக்களை நம்பியும், ஆசா பாசங்களை நம்பியும் இருக்கிறவர்களுக்கு இது பொல்லாத காலம். இந்த காலத்திற்குள் வாழுகிற நாம் காலத்தை பிரயோஜனப்படுத்திக்கொள்ள வேண்டும் என்றால் இந்த காலத்தின் அதிபதியின் மேல் நம்பிக்கை வைக்கும்பொழுது காலங்கள் பிரயோஜனமாக மாறுகிறது. இந்த காலங்களை பிரயோஜனமாக அவர் மாற்றிக் கொடுப்பார். **வெளி. 10:6ல் "இனி காலம் செல்லாது"** என்றும் **வெளி. 22:10; 1:3ல் "காலம் சமீபமாயிற்று"** எனவும் எழுதப்பட்டுள்ளது. எப்பொழுது என்ன நடக்கும் என்று சொல்ல முடியாத காலத்தில்தான் நாம் உள்ளோம். காலையில் பாக்கிறவர்களை மாலையில் பார்க்க முடியவில்லை. நேற்று இருந்தவர்கள்

இன்றைக்கு இல்லை. இன்று இருப்பவர்கள் நாளைக்கு இருப்போமா என்கிற நிச்சயமில்லை. இனி காலம் செல்லாது. **வெளி. 11:18ன்** படி பலனளிக்கும் காலம் வந்துவிட்டது.

**"இதோ, சீக்கிரமாய் வருகிறேன், அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது" - வெளி. 22:12**

பலனளிக்கும் காலம் என்றால் கடைசி காலமாகும். இயேசு கிறிஸ்து சீக்கிரமாய் வரப் போகிறார்! அன்பானவர்களே! இன்றைக்கு எப்படிப்பட்ட ஒரு காலத்திற்குள் நீங்கள் இருக்கிறீர்கள். பொல்லாத காலத்திற்குள் நீங்கள் காணப்பட்டால் கர்த்தருடைய கரங்களுக்குள் ஓடி வந்துவிடுங்கள். கர்த்தாவே! நீர் என் காலத்தை உம்முடைய கரத்தில் எடுத்துக் கொள்ளும் என்று கூறுங்கள். அப்பொழுது உங்களுக்கென்று குறிக்கப்பட்டிருக்கும் அல்லது நியமிக்கப்பட்டிருக்கும் அந்த காலத்திலே அவர் எல்லாவற்றையும் சரியாக வழி நடத்துவார். அது ஒருவேளை உங்களுடைய படிப்பாக இருக்கலாம், திருமண காரியமாக இருக்கலாம், குடும்ப வாழ்க்கையாக இருக்கலாம் அல்லது நீங்கள் எதிர்பார்க்கிற ஏதாவது ஒரு நன்மையாக இருக்கலாம். அதினதின் காலத்தில் நேர்த்தியாக செய்கிறவர் உங்களை கட்டாயம் சரியாய் வழிநடத்துவார்.

காலத்தின் அதிபதியான தேவனை நீங்கள் நம்பி, அவரை விசுவாசித்து, அவரை சார்ந்து வாழும்பொழுது உங்களை எப்படி நடத்தாமல் இருப்பார். நிச்சயம் நடத்துவார் என்ற நம்பிக்கை உங்களுக்குள் இருக்க வேண்டும். இருக்கிற வராகவே இருக்கிறேன் என்று சொன்னவர் இன்றும் நம்மோடுகூட இருக்கிறார். அதை முழுமையாக நம்பி விசுவாசிப்பீர்கள் என்றால் உங்கள் வாழ்க் கையில் பெரிதான ஆசீர்வாதம் கிடைக்கும். ஆபிரகாம், யோசேப்பு, தாவீது, பவுல் போன்ற பக்தர்களின் காலத்தை எல்லாம் ஒளிமயமாக மாற்றினவர். ஏன் உங்கள் காலத்தை ஒளிமயமாக மாற்ற மாட்டாரா? நிச்சயமாக மாற்றுவார்.

பிரியமானவர்களே! ஒளிமயமான காலம் உங்களுக்கும் இருக்கிறது. இன்றைக்கே உங்களுடைய காலங்களை அவருடைய கரத்திலே ஒப்புக் கொடுங்கள்! காலத்தின் அதிபதி உங்கள் காலத்தை அவரது கரங்களில் எடுத்துக் கொள்ளட்டும். அவர் கரங்களில் உங்கள் காலத்தை எடுக்கும் பொழுது உங்கள் காலங்கள் பிரகாசமாகவும், ஆசீர்வாதமாகவும் மாறும். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.




**Honey Dew தேன் துளிகள்**
**Whats App No: 95975 55066**

# கடந்த நாட்களில் நமது ஊழியத்தின் மூலம் கர்த்தர் செய்த அற்புதங்களில் ஒருசில உங்கள் பார்வைக்கு

## கால்களில் ஏற்பட்ட பெலவீனம் முற்றிலும் நீங்கியது!

என் மகனுக்கு 4 வயதாகிறது. அவனுக்கு அநேக நாட்களாக இரண்டு கால்களிலும் வீக்கம் இருந்து கொண்டே இருந்தது. மருத்துவர்கள் ஆலோசனையின்படி சிகிச்சை எடுத்தும் குணமாகவில்லை. இந்நிலையில் **"அன்பரின் ஊழியம்"** பத்திரிக்கையில் அநேக சாட்சிகளை படித்தேன். அதினால் எனக்கு இயேசுவின் மீது விசுவாசம் வந்தது. அதின்படி மகனுக்கு சுகம் வேண்டும்படி பொருத்தனை செய்து நாற்பது நாட்கள் ஜெபித்தேன். பொருத்தனையின்படி ஜெபத்தை கேட்ட தேவன் மகனுக்கு அற்புத சுகத்தை கொடுத்தார். வீக்கம் எல்லாம் போய் விட்டது. அற்புத சுகம் தந்த தேவனுக்கு கோடா கோடி ஸ்தோத்திரம் எனது பொருத்தனை காணிக்கையை அன்பரின் ஊழியத்திற்கு அனுப்புகின்றேன்.

**- திருமதி. ராஜம்மாள் சந்திரன், மைசூர்**

## பயம் நீங்கி அற்புத சுகம் கிடைத்தது

எனக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். அதில் மூத்த மகனுக்கு வாந்தி வந்துகொண்டே இருந்தது. மருத்துவமனைக்கு அழைத்துக் கொண்டு சென்றோம். எனினும், வாந்தி நிற்கவில்லை. இதனால் மிகவும் மனக் கவலையடைந்தோம். இந்நிலையில் தேவ சமூகத்தில் **"தேவனே! குழந்தைக்கு சுகம் உண்டானால் அன்பரின் ஊழியத்தில் தேவ நாமம் மகிமைக்காக சாட்சி சொல்வேன்"** என்று பொருத்தனை செய்தேன். எனது பொருத்தனையை அங்கீகரித்த தேவன் மகனுக்கு அற்புத சுகத்தை தந்தார்.

மேலும் எனக்கும், என் கணவருக்கு மற்றும் என் இளைய குழந்தைக்கு காய்ச்சல் வந்துவிட்டது. கொரோனா காய்ச்சலாக இருக்குமென பயந்தோம். இளைய குழந்தைக்கு 11 மாதமே ஆகின்றபடியால் காய்ச்சல் தாங்க முடியாமல் திடீர் திடீரென அழ ஆரம்பித்தான். எதற்கு அழுகிறான் என்று தெரியவில்லை. மருத்துவமனையில் குழந்தைக்கு ஊசி செலுத்தினார்கள். எனினும் அவன் அழுது கொண்டே இருந்தான். இந்நிலையில் அன்பரின் ஊழியத்தில் கொடுத்த ஜெப எண்ணெயை குழந்தையின் சரீரத்தில் ஜெபித்து பூசினோம். கர்த்தர் அற்புத சுகத்தை குழந்தைக்கு கொடுத் தார். அவன் இப்பொழுது பூரண சுகத்தோடு இருக்கிறான். எங்கள் இருவருக்கும் காய்ச்சலி லிருந்து தேவன் சுகத்தை தந்தார். அற்புதம் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம்!

**- திருமதி. ரெஜிலா ஜெலின், இடையன்குடி**

## கேன்ஸர் கட்டி மறைந்த அதிசயம்

**என் அம்மா கர்ப்பப்பையில் ஏற்பட்ட கேன்ஸர் கட்டியினால் மிகவும் வேதனையை அனுபவித்து வந்தார்.** எங்களுக்கு அப்பொழுது வீடு கூட இல்லாமல் ஆச்சி வீட்டில் இருந்தோம். மருத்துவ சிகிச்சை செய்யவும் வசதியில்லை. தொலைக்காட்சியில் அன்பரின் ஆறுதல்

Tamil Whats App No: 95004 87059

நிகழ்ச்சியை பார்த்து விசுவாசத்தோடு திருச்சி குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் கலந்து கொண் டோம். கூட்ட முடிவில் **திருமதி. மார்கிரேட் ஸ்திரா** அவர்களிடம் என் அம்மாவின் நிலையை கூறினேன். அம்மாவிற்காக சகோதரி அவர்கள் மிகுந்த பாரத்துடன் ஜெபித்தார்கள். கர்த்தர் அற்புதமாக கேன்ஸர் கட்டி கரையும்படி உதவி செய்தார். இன்று சுமார் எட்டு ஆண்டுகளாக என் அம்மா நல்ல சுகத்துடன் இருக்கிறார்கள். சுகம் தந்த தேவனுக்கு ஸ்தோத்திரம்!

## தடை நீங்கி திருமண காரியம் நடந்தேறியது!



**எனது மகள் திருமணத்திற்காக தொலைப்பேசி மூலம் தொடர்பு கொண்டு ஜெபிக்கக் கேட்டேன்.** அன்பரின் ஊழிய ஜெப மையத்தில் எங்களுக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். **தேவன் ஜெபத்தைக் கேட்டு, பல மாதங்களாக தடையாகவே இருந்த திருமண காரியம் இனிதே நடந்தேற இரக்கம் செய்தார்.** தேவனை அறிந்த மகனாக வேண்டுமென்று ஜெபித்தேன். அதேபோல் தேவனை அறிந்து, நல்ல உத்யோகத்தில் உள்ள, குணசாலியான மகனை தந்து எங்களை குடும்பமாக மகிழச் செய்த தேவனுக்கு கோடா கோடி ஸ்தோத்திரம்.

- Sis. **செல்வி, மதுரை**

## ஜீவனை தந்த அற்புதத்தின் தேவன்

எனது தம்பி நேதாபிரைடன் கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டு மிகவும் ஆபத்தான நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டிருந்தான். அவனது நுரையீரல் 75% பாதிக்கப்பட்டு மூச்சு திணறல் ஏற்பட்டது. பிழைப்பதே கடினமான நிலை என்ற சூழ்நிலையாகிவிட்டது. எங்கள் குடும்பமே தம்பியை நினைத்து கலங்கினோம். இந்நிலையில் மே 15ஆம் தேதி **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களை தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு தம்பியின் நிலையை கூறினோம். சகோதரன் தம்பியின் நிலையை கனிவுடன் விசாரித்து **"கலங்காதீர்கள்! கர்த்தர் நிச்சயம் தம்பியை சுகமாக்குவார்"** எனக் கூறி கண்ணீரோடு ஜெபம் ஏறெடுத்தார்கள். அந்த ஜெபத்திற்கு பிறகு தம்பியின் உடல்நிலையில் முன்னேற்றம் காணப்பட்டது. சர்வ வல்ல தேவன் தம்பிக்கு அற்புத சுகத்தை தந்தார். கர்த்தர் செய்த நன்மைக்காக எங்களது பொருத்தனை காணிக்கையை ஊழியப் பணிக்கு அர்ப்பணிக்கின்றோம்.

**- Mrs. நிவேதித்தா பிரகாஷ், மார்த்தாண்டம்**

## அன்பரின் ஆறுதல் TV நிகழ்ச்சி நேரங்கள்

நம்பிக்கை TELEVISION

திங்கள், செவ்வாய், புதன்
காலை 6.30 – 7.00

புதன்
மதியம் 12.00 – 12.30

வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.30 – 9.00

**தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

ARADANA TV
புதன், வியாழன், வெள்ளி
இரவு 7.00 – 7.30

**மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

HARVEST TV
சனி இரவு 07.30 – 08.00

# S J SAVES TRUST

## நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை



**நீதிமானுடைய உதடுகள் அநேகரைப் போஷிக்கும் – நீதி. 10:21**
**தரித்திரருக்குக் கொடுப்பவன் தாழ்ச்சியடையான் – நீதி. 28:27**
**நீதிமான் ஏழைகளின் நியாயத்தைக் கவனித்தறிகிறான் – நீதி. 29:7**
**ஏழைக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் நியாயஞ்செய்து, சிறுமைப்பட்டவனுக்கும் திக்கற்றவனுக்கும் நீதி செய்யுங்கள்.**
**பலவீனனையும் எளியவனையும் விடுவித்து, துன்மார்க்கரின் கைக்கு அவர்களைத் தப்புவியுங்கள் – சங்கீதம் 82:3,4**

என் அன்பு S J Saves Trust பங்காளர்களே!

சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஏழை பிள்ளைகளை நினைத்து உதவி செய்கிற, ஆதரிக்கின்ற உங்கள் ஒவ்வொருவரையும் பரிசுத்த தேவன் அதிகமாய் ஆசீர்வதிப்பாராக. ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான் என்று வேதம் சொல்கிறது. நாம் இரண்டு கைகளையும் விரித்து ஒரு ஏழைக்கு கொடுக்கின்ற உதவிக்கு தக்க பலனை கர்த்தர் நிச்சயம் தருவார். நம்மை எல்லாம் உருவாக்கி, நடத்துகிற தேவனுடைய கரத்திற்குள் அத்தனை உலகங்களும், நட்சத்திரங்களும், கிரகங்களும் அடங்கி இருக்கிறது அல்லவா? அதில் காணப்படுகிற பொன், வெள்ளி, தாதுப் பொருட்கள், தோட்டங்கள், வயல்கள், மலைகள் அத்தனையும் தேவனுக்கு சொந்தம் அல்லவா. எனவே கூப்பிடுகிற எளியவனுக்கும், உதவியற்ற சிறுமையானவனுக்கும் நாம் உதவி செய்யும்பொழுது கர்த்தர் தமது கரங்களை விஸ்தாரமாக விரித்து நம்மை ஆசீர்வதிக்கிறார்.

இந்த கொடிய கொரோனா காலத்திலும் உங்கள் அன்பு சகோதரனாகிய நான் உங்கள் ஜெபத்தினாலும்,தாராளமான உதவியினாலும் ஜுன் மாதம் 27ம் தேதி மற்றும் ஜுலை மாதம் 4, 11 ஆகிய தேதிகளில் சுமார் **585** பேருக்கு உதவி செய்யும்படிக்கு கர்த்தர் இரக்கம் செய்தார். இதில் ஆச்சரியப்படத்தக்க விஷயம் என்னவென்றால் நாங்கள் சென்ற இடங்கள் எல்லாம் மலையடிவாரம், காட்டுப் பகுதிகள், அடிப்படை வசதியற்ற கிராமங்களாக இருந்தபோதும் அங்குள்ள பிள்ளைகள் மத்தியிலும் மற்றும் விதவைகள், ஏழைகள் மத்தியிலும் நாங்கள் அவர்களுக்கு அறிவுரை கூறி அவர்களை பராமரித்து, அவர்களுக்கு மருந்துகள் கொடுத்த படியாலும் தேவனுடைய கிருபையினாலும் அவர்கள் ஒருவரையும் எந்தவித கொரோனோவோ, காய்ச்சலோ தாக்கவில்லை. ஆம்! சிறுமைப் பட்டவர்கள் மேல் நாம் சிந்தையாக இருக்கும் பொழுது கர்த்தர் நம்மையும் பாதுகாக்கிறார். இந்த கொரோனோ காலத்தில் மருத்துவர்களின் கூற்றின்படி, அரசாங்க ஆலோசனையின்படி அனைவருக்கும் முகக்கவசம், சானிடைசர் எல்லாம் சரியானவிதத்தில் கொடுத்த பின்பே மற்ற உதவிகள் செய்யப்பட்டது.

ஜுன் 27ஆம் தேதி சேலம் மாவட்டம் சேஷன்சாவடி, வெள்ளாளகுண்டம் , பிரிவுரோடு, மாட்டு மருத்துவமனை, செல்லியம்மன் காலனி, கணவாய்புதூர், பெரியேரி ஆகிய கிராமங்களில் **140** சிறுவர்களுக்கும் மற்றும் நம்முடைய ட்யூசன் மையத்தில் படிக்கின்ற மாணவர்களுக்கும், **40** வயோதிப விதவைகளுக்கும் **Zinc, Vitamin Tablets, Cough Syrup, Protein, Multi Vitamin Syrup** மற்றும் அவசர கால மருந்துகளும் கொடுக்கப்பட்டது.

பிற்பாடு ஜுலை 4ஆம் தேதி சேலூர் செல்லம்பாளையம், மல்லிகாபுரம், ஆசம் பாளையம், ஜேடார்பாளையம், கருப்பண்ணநகர், ஓலப்பாளையம், சின்னமருதூர், சாமிநாதபுரம்

மற்றும் சின்னசோளிபாளையம் ஆகிய ஒன்பது கிராமங்களில் உள்ள சிறு பிள்ளைகளுக்கும், **Day Care Centre**-ல் படிக்கும் நமது மாணவர்களுக்கும் அறக்கட்டளை மூலம் 190 பேருக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

மேலும், ஜுலை 11ம் தேதி காட்டுபுதூர், வேப்பிலைபட்டி, கவர்கல்பட்டி, மைக்ரோகாலனி, செல்லியம்மன் நகர், மன்னார்பாளையம், சென்ராயன்பாளையம் ஆகிய கிராமங்களில் **175** சிறு பிள்ளைகள் மற்றும் **40** வயோதிப விதவை களுக்கும் மருந்துகளும், உணவும் வழங்கப்பட்டது. மொத்தம் **585** ஏழை மக்களுக்கு வழக்கம்போல மருந்துகளுடன், சிக்கன்பிரியாணி, இனிப்புகளும் வழங்கப்பட்டது.

சிறு பிள்ளைகள் தங்களை எப்படி கொரோனாவிலிருந்து பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொடுக்கப்பட்டது. பிள்ளைகள் அனைவரும் உற்சாகமாய் கேட்டு சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டு நமது ஆலோசனையின்படி சுகபத்திரமாய் இருக்கிறார்கள். நம்மிடம் படிக்கின்ற அநேக பிள்ளைகளின் பெற்றோர்கள் சிறுநீரகக் கோளாறு, லிவர் டேமேஜ் ஏற்பட்டு இறந்து போய் உள்ளார்கள். கடினமான வேலையாகிய கல் உடைக்கும் பணியை செய்துவிட்டு மதுபானத்தை குடித்து பாதி வயதில் இறந்து போனவர்களின் மனைவி மற்றும் அவர்களது பிள்ளைகளும் அநாதையாக இருப்பதை எங்களால் காண முடிகிறது.

கடந்த மாதம் விசேஷமாக ஜாய்ஸ் என்கிற அன்பு சகோதரி தனது கணவர் இறந்த நாளை முன்னிட்டு ஒரு மையத்திற்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்தார்கள். மற்றும் அன்பு சகோதரர் **Freedon Daniel** தமது குடும்பம் முழுவதையும் விசேஷமாக வயதான அம்மாவையும் கர்த்தர் கொரோனாவிலிருந்து குணமாக்கினதற்காக இப்பணிகளுக்கு உதவி செய்தார்கள். இன்னும் பெயர் சொல்ல விரும்பாத அநேகர் உதவினார்கள். கர்த்தர் உதவின ஒவ்வொரு குடும்பங்களிலும் அற்புதங்களை செய்தார். அந்த சாட்சிகளை எங்களுடன் பகிர்ந்துகொண்டார்கள்.

இந்த மழை காலத்தில் களிமண்ணால் கட்டப்பட்ட பெரிய பெரிய ஓட்டைகள் உள்ள சுவர்கள் உள்ள வீட்டில் வசிக்கின்ற மூன்று விதவைகளுக்கு வீடு கட்ட தீர்மானித்துள்ளோம். குளிரில் வாடுகிற இந்த ஏழை விதவைகளுக்கு உங்களால் முடிந்த உதவிகளை செய்யுங்கள். ஒரு வீடு கட்ட **Rs.50,000/-** செலவாகிறது.

இருபதுக்கும் மேற்பட்ட நமது ட்யூசன் மையங்களில் படிக்கின்ற **1100** மாணவர்களின் நலன் கருதி ஆகஸ்ட் மாதத்திலிருந்து 60 ஆசிரியர்களை கொண்டு ட்யூசன் வகுப்புகள் சொல்லி கொடுக்க இருக்கிறோம். இதற்கு மாதத்திற்கு மொத்தம் **Rs.10,00,000/-** செலவாகிறது. ஏழைகளை நேசிப்போம், கர்த்தர் தாமே உதவி செய்கின்ற உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக

**ஏழை எளியவர்களுக்கு உதவிட கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 019150310875369 |
| Bank Name | : | Tamil Nadu Mercantile Bank |
| Branch | : | Palakarai, Trichy. |
| IFS Code | : | TMBL0000019 |
| A/c Type | : | Current |

**மருத்துவமனை பணிகளுக்கு கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 36477148891 |
| Bank Name | : | State Bank of India |
| Branch | : | Cantonment, Trichy Main Branch |
| IFS Code | : | SBIN 0000930 |
| A/c Type | : | Current |

**IT Act–ன்படி Sec. 80G Exemption உண்டு**

**Telugu Whats App No: 91770 87860**

**சேலம் மாவட்டம் சேஷன்சாவடி, வெள்ளாளகுண்டம், பிரிவுரோடு, மாட்டு மருத்துவமனை, செல்லியம்மன் காலனி, கணவாய்புதூர், பெரியேரி ஆகிய கிராமங்களில் உள்ள மாணவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டது.**











**சேளூர் செல்லம்பாளையம், மல்லிகாபுரம், ஆசம்பாளையம், ஜேடார்பாளையம், கருப்பண்ணநகர், ஓலப்பாளையம், சின்னமருதூர், சாமிநாதபுரம் மற்றும் சின்னசோளிப்பாளையம் ஆகிய கிராமங்களில் உள்ள மாணவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டது.**











# S J SAVES TRUST

## கிராமப்புற மருத்துவமனை

கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: உன் புண் ஆறாததாயும் உன் காயம் கொடிதாயும் இருக்கிறது.
உன் காயங்களைக் கட்டும்படி உனக்காக ஏற்படுவாரில்லை; உன்னைச் சொஸ்தப்படுத்தும் ஔஷதங்களுமில்லை.
அவர்கள் : உன்னை விசாரிப்பாரற்ற சீயோன் என்று சொல்லி, உனக்குத் தள்ளுண்டவள் என்று பேரிட்டபடியால், நான் உனக்கு ஆரோக்கியம் வரப்பண்ணி, உன் காயங்களை ஆற்றுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் - எரேமியா 30:12,13,17
என் ஜனமாகிய குமாரத்தியின் காயங்களினால் நானும் காயப்பட்டேன்; கரிகறுத்திருக்கிறேன்; திகைப்பு என்னைப் பிடித்தது.
கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ? இரணவைத்தியனும் அங்கே இல்லையோ? பின்னை ஏன் என் ஜனமாகிய குமாரத்தி சொஸ்தமடையாமற்போனாள்? - எரே. 8:21,22

எனக்கன்பான தேவ பிள்ளைகளே!

**ஒரு மனுஷனுடைய சரீரம் அவன் இருக்குமட்டும் அதற்கு வேதனை உண்டு** என்று யோபு என்னும் மகா பெரிய தேவ பக்தன் எழுதுகிறான் **(யோபு 14:1, 22)**

நாம் வாழும் உலகத்தில் விசேஷமாய் சமீப காலங்களில் வியாதிகள் பெருகிக் கொண்டே போவதை பார்க்கிறோம். அதிலும் தீராத வியாதிகள் நாளுக்குநாள் அதிகரிக்கிறது. ஒரு பக்கத்தில் நமது உணவு பழக்கத்தினால் வரும் வியாதிகள், அதிக வேலையின் நிமித்தம் நேரத்திற்கு சாப்பிடாததால், உடற்பயிற்சி குறைவுகளால், தொன்றுதொட்டு நம் பெரியோர்கள் மூலம் நமக்குள் உருவாகிற பரம்பரை வியாதிகள், Stress, Tension, கவலைகளால் நம்மில் அநேக வியாதிகள் உருவாகிறது. சிற்சில சமயங்களில் அநீதியான கொடுமைகளை மனிதர்கள் கபடற்ற சிறுவர்களுக்கும், பெரியோர்களுக்கும் செய்யும்பொழுது அவர்களுக்கு தேவ கோபத்தால் தீராத வியாதி வருவதை பார்க்கிறோம். உதாரணமாக படைத் தலைவன் யோவாபை குறித்து தாவீது **"அது யோவாபுடைய தலையின் மேலும், அவன் தகப்பன் குடும்பத்தின்மேலும் சுமந்திருப்பதாக யோவாபின் வீட்டாரிலே பிரமியக்காரனும், குஷ்டரோகியும், கோல் ஊன்றி நடக்கிறவனும், பட்டயத்தால் விழுகிறவனும், அப்பம் குறைச்சலுள்ளவனும், ஒருக்காலும் ஒழிந்துபோவதில்லை" (2 சாமுவேல் 3:29)** எனக்கூறுகிறான். அநியாயமாய் குற்றமற்ற சகோதரனை கொலை செய்தபடியால் அவன் வீட்டில் வருகிற வியாதிகளை குறித்து தாவீது தெளிவாக சொல்கிறான்.

வேண்டாம் என்று சொல்லியும் தீர்க்கதரிசிக்கு கீழ்ப்படியாமல் திருட்டுத்தனமாக காரியங்களை கேயாசி செய்தபடியால் தீர்க்கதரிசி அவனை சபிக்கிறான். அதனால் குஷ்டரோகம் அவனுக்கு வருகிறது. அதேபோல சிநேகமாய் இருந்த பிற்பாடு நீதிமானுக்கு விரோதமாய் வஞ்சகமாய் காரியங்களை செய்தவர்களுக்கு தேவனால் வரும் தண்டனைகளை **சங்கீதம் 55:9 - 15ல்** பார்க்கிறோம். மற்றும் வியாதிகள் செய்வினைகள், பில்லிசூனியம், தீய மந்திர சக்திகளாலும், கொடிய பிசாசின் செயல்களாலும் ஜனங்கள் அவதிப்படுவதையும் காண்கிறோம். இயேசுகிறிஸ்து வாழ்ந்த காலத்தில் இப்படிப் பட்டவர்களை எல்லாம் அற்புதமாய் குணமாக்கினார். உண்மையிலேயே வியாதிகள் மிகவும் கொடுமையானது.

விசேஷமாக கடந்த ஒன்றரை வருடமாக கொரோனோ என்னும் வாதை நோயால் எவ்வளவாய் மக்கள் பாதிக்கப்பட்டார்கள் என்பதையும், அநேக தேவ பிள்ளைகள்கூட அதனால் மரித்ததையும் நாம் கண்டோம். இந்த கொரோனோ காலத்தில் நமது கிராமப்புற மருத்துவமனையில் கொரோனோ நோயாளியை கவனிக்க முடியுமா என்று மருத்துவ தன்னார்வலர்கள் கேட்டார்கள். ஆனால் நமக்கு தியேட்டரும், அல்ட்ரா சவுண்டு ஸ்கேன் இல்லாத படியால் அப்படிப்பட்ட ஏழை மக்களுக்கு உதவ முடியாமல் போய்விட்டது. எனவே நமது மருத்துவ மனையில் துரிதமாய் ஒரு மினி தியேட்டரையும், அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன்-ஐயும் வாங்க வேண்டி யுள்ளது. இதற்காக ஊக்கமாய ஜெபியுங்கள். இரண்டிற்கும் சுமார் **Rs.50,00,000/-** தேவைப்படுகிறது.

தியாக மனப்பான்மையுள்ள 5 வருட அனுபவமுள்ள மருத்துவர்கள் (M.B.B.S) தேவை. மூன்றரை வருடம் படித்து ஐந்து வருட அனுபவமுள்ள செவிலியர்கள் (S/N) தேவை. மற்றும் மருத்துவமனையை கவனிக்க ஓய்வுபெற்ற Matron தேவை. வெளியூர்களிலிருந்து வருகிறவர் களுக்கு தங்கும் வசதி செய்து தரப்படும். விருப்ப முள்ளவர்கள் எங்களுடன் தொடர்புகொள்ளுங்கள். தகுந்த ஊதியம் வழங்கப்படும்.

நமது மருத்துவமனை ஒரு மிஷன் மருத்துவமனையாக உயர்வடைய பங்காளர்கள் யாவரும் ஜெபியுங்கள்.

கர்த்தர் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் சகல நோய்களிலிருந்தும் பாதுகாத்து வழி நடத்துவாராக.

## வாசகர்கள் கவனத்திற்கு

**இப்பத்திரிக்கையை வாசிக்கின்ற வாசர்களாகிய உங்களில் யாருக்காவது நமது மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொள்ளவேண்டுமென்றால் நீங்கள் வந்து சிகிச்சை பெறலாம். தொடர்பு கொள்ள வேண்டிய**

**தொலைபேசி எண் : 96553 18991**

**வரும் வழி : திருச்சி மத்திய பேருந்துநிலையத்திலிருந்து திண்டுக்கல் சாலையில் (சுமார் 15 கி.மீ) உள்ள ஜே.ஜே. பொறியியல் கல்லூரி விடுதியின் எதிர்புறத்தில் நமது மருத்துவமனை உள்ளது.**

**தேவை**

**அர்ப்பணிப்புள்ள மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் விண்ணப்பிக்கவும்**

## WANTED FOR SJ RURAL HOSPITAL

1. **Doctors - M.B.B.S. With 5 Years experience (Rtd. Doctors can apply)**
2. **ANM Nurses (3½ Year course completed & 5 Years experience**
3. **Hospital Supervisor**
4. **Gardener - Single or family**



**Apply to : info@mojindia.org**

**Service minded, Mission oriented, Christians preferred**



# உருக்கமும், இரக்கமும் உள்ள தேவன்

தேவ செய்தி : திருமதி. மார்கிரேட் ஸ்திரா

கிறிஸ்துவுக்குள் எனக்கன்பான தேவ பிள்ளைகளே!

உங்கள் அனைவரையும் நான் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகின்றேன்.

நீங்கள் அனைவரும் சுகமாக, பத்திரமாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன், விசுவாசிக்கிறேன். தேவனாகிய கர்த்தர் உங்கள் அனைவருக்கும், எல்லாவிதத்திலும் ஒத்தாசையாக இருந்து உங்களை வழி நடத்தும்படி அனுதினமும் எங்கள் ஜெபங்களில் நாங்கள் உங்களை நினைவு கூறுகிறோம். இந்த கொடிய காலங்களில் அவர் நம்மோடு இல்லா விட்டால் அவர் நம்மை பாதுகாக்காவிட்டால் நாம் என்றைக்கோ நிர்மூலமாகி இருப்போம். அவருடைய சுத்த கிருபையை நினைத்து எந்நாளும் நன்றி உள்ளவர்களாய் நாம் அவரை ஸ்தோத்தரிப்போம்.

**உன் தேவனாகிய கர்த்தர் இரக்கமுள்ள தேவனாயிருக்கிறபடியால், அவர் உன்னைக் கைவிடவுமாட்டார், உன்னை அழிக்கவுமாட்டார், உன் பிதாக்களுக்குத் தாம் ஆணையிட்டுக் கொடுத்த உடன்படிக்கையை மறக்கவுமாட்டார்**

**- உபாகமம் 4: 31**

நம்மை சுற்றி நடக்கின்ற அநேக இறப்பு களையும், அழிவுகளையும் நினைத்து நான் மிகுந்த வேதனையோடு ஒரு நாள் தேவ சமூகத்தில் செலவிடும் பொழுது தேவன் எனக்கு மேற்கண்ட வசனத்தை தந்தார். அது எனக்கு மிகுந்த ஆறுதலாகவும், சந்தோஷத்தை கொடுப்பதாகவும் இருந்தது. நாம் சுற்றிலும் அழிவை பார்க்கும்பொழுது ஏன் இப்படி நடக்கிறது, எதற்கு நடக்கிறது, நானும் என்னுடைய குடும்பமும் தப்ப முடியுமா? என்று பல கேள்விகள் நம்முடைய மனதில் தோன்றலாம். எதிர்காலத்தை நினைக்கையில் எப்படி நாம் சமாளிப்போம், இனிமேல் என்ன ஆகப் போகிறது என்று கூட நினைக்கலாம். மேற்கூறிய வசனம் கூறுகிறபடி அவர் நம்முடைய தேவன், அவர் நம்மேல் இரக்கமுள்ளவராய் இருக்கிறார். இந்த இரக்கமுள்ள தேவனை குறித்து வேதம் என்ன சொல்கிறது தெரியுமா?

**கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்**

**- சங்கீதம் 103: 8**

## நம்மேல் இரங்கும் தேவன்

இரக்கம் என்பது அநேக மனிதர்களிடத்தில் கூட காணப்படாத ஒன்று. ஒரு சமயம் அமெரிக்க தேசத்தில் அவசர உதவி தொலைப்பேசி எண்ணாகிய 911-க்கு தொலைப்பேசி அழைப்பு ஒன்று வந்தது. அதில் பேசிய வாலிப மகள் கதறினாள். யாராவது ஒரு உதவியை அனுப்புங்கள். என்னுடைய தோழனை சாலையில் சென்று கொண்டிருக்கும்பொழுது துப்பாக்கியால் சுட்டுவிட்டார்கள் என்று கதறினாள். அப்பொழுது அவசர பிரிவில் இருந்தவர் **"யார் சுட்டது, யார் சுட்டது"** என்று திரும்ப திரும்ப கேட்டார். இந்த வாலிப மகளுக்கு சுட்டது யார் என்று தெரியாது. காரணம் சாலையில் வந்து கொண்டிருக்கும் பொழுது காரில் சென்ற ஒருவன் விளையாட்டாக சுட்டுக்கொண்டே வந்தபொழுது இந்த மகளின் அருகில் இருந்த தோழனின் மீதும் அந்த குண்டு பாய்ந்துவிட்டது. அவ்வளவுதான் அந்த பெண்ணுக்கு தெரியும். வேறு விவரங்கள் தெரியாது. அவசர உதவி பிரிவில் இருந்தவர் சுட்டவர் யார் என்று சொல்லாதபடியால் தொலைப்பேசியை பேசிக் கொண்டிருக்கும்பொழுதே துண்டித்துவிட்டார். அந்த வாலிப மகன் சாலை ஓரத்திலேயே பரிதாபமாக மரித்தான். பாருங்கள் வாசகர்களே! நாம் இப்படிப் பட்ட உலகத்தில் தான் வாழ்கிறோம். அவசர உதவி பிரிவில் இருக்கிறவர்களே உதவாமல் போகும் பொழுது சாதாரண மக்களுக்கு இந்த உதவும் மனப்பான்மை எப்படி வரும். ஆனால், நம்மை சிருஷ்டித்த தேவனாகிய கர்த்தரோ நம்மை அழிக்கிறவர் அல்ல, நம்மேல் இரக்கமுள்ளவராக இருக்கிறார். அவருடைய இரக்கத்திற்கு முடிவே இல்லை.

**நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங் களுக்கு முடிவில்லை - புலம்பல் 3 : 22**

பெற்றோர் எப்பொழுதும் தங்களுடைய பிள்ளைகளை கண்டு இரக்கம் கொள்வார்கள். சில நேரங்களில் பலவிதமான பிரச்சனைகளை

பிள்ளைகள் உருவாக்கினாலும் அவர்கள் மீது கோபம் இருந்தாலும்கூட பெற்றோர் பிள்ளைகள் செய்யும் அக்கிரமங்களை எல்லாம் மறந்துவிட்டு அவர்கள் மீது இரக்கம் கொள்கிறவர்களாக இருக்கிறார்கள். அதேபோலத் தான் நம்முடைய தேவனும். **"தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார் (சங்கீதம் 103:13)** என்று வேதம் சொல்கிறது. எனவே உங்களுடைய வாழ்க்கையை நினைத்து, உங்களுக்கு ஏற்படும் பலவிதமான போராட்டங்களை நினைத்து சோர்ந்து போகாதீர்கள். அவர் உங்கள் மீது நிச்சயம் இரங்குவார். உங்களை கண்டும், காணாதவர் போல இருக்க மாட்டார். எப்பொழுதுமே உங்களுடைய கண்ணீரையும், பாரங்களையும் நினைத்து உங்களுக்கு நிச்சயம் உருக்கமாக இரங்குவார். வேதத்தில் நாம் காண்கிற எத்தனையோ பக்தர்கள் தங்களுடைய வாழ்க்கையில் பலமுறை இடறுகிறதை நாம் பார்க்கிறோம். அந்த இடர்கள் எல்லாம் வரும்பொழுது தேவன் அவர்கள் மீது, அவர்கள் இருதயத்தை பார்த்து இரங்கினார். அவர்கள் கண்ணீர் வடிக்கும் பொழுது அவர்களுடைய பிரச்சனைகளை நீக்கி ஆறுதல்படுத்தினார்.

ஆம் பிரியமானவர்களே! உங்கள் வாழ்க்கையிலும் தேவன் இரங்குகிறவராக இருந்து உங்களை சந்தோஷப்படுத்துவார்.

## தேவன் உங்களை கைவிடமாட்டார், அழிக்கமாட்டார்!

கோபம் அதிகமாய் வரும்பொழுது மனிதர்களாகிய நாம் எப்போதுமே அவசரமாக பல முடிவுகளை எடுத்துவிடுகிறோம். நமக்கு தவறு செய்த மனிதர்களை பார்த்து இரங்கவே மாட்டோம். சில நேரங்களில் நாம் இரங்கினாலும், தவறு செய்தவர்கள் மனந்திருந்தாமல் அதே தவறை திரும்பவுமாய் செய்கிறதை நாம் காண முடிகிறது. அதனால் நாம் பல கஷ்டங்களுக்கு உள்ளாகிவிடுகிறோம். நம்முடைய தேவனாகிய கர்த்தரோ நம் அனைவருடைய வாழ்க்கையையும் அறிந்திருக்கிறார். அவருக்கு முன்பாக மறைவானது ஒன்றுமேயில்லை. இப்படி சகலத்தையும் தெரிந்திருந்தாலும் கூட, அறிந்திருந்தாலும் கூட ஒருநாளும் தேவன் நம்மை கொன்றுவிட வேண்டும், அழித்து சாகடிக்க வேண்டும் என்று நினைப்பதில்லை. சில நேரங்களில் நம்மை சிட்சிக்கிறார். ஆனால் அந்த சிட்சையில் நாம் திருந்தும் பொழுது அவர் நம்மை நேசித்து அரவணைக்கிறவராக இருக்கிறார். எந்த சூழ்நிலையிலும் நம்மை அவர் ஒதுக்கி தள்ளுகிறவர் அல்ல. அவர் எப்பொழுதும் நம்மை நேசித்து நம் கூடவே இருக்கிறவராகவே இருக்கிறார். மனிதர்கள் பல துவேஷங்களின் நிமித்தம் ஒருவரை ஒருவர் வெறுப்பார்கள், ஒதுக்குவார்கள். ஆனால் நம் தேவனாகிய கர்த்தரோ நம்மை தள்ளி வைக்கிறவர் அல்ல. **யோசுவா 1:5, 9ல் "உன்னோடும் இருப்பேன்; நான் உன்னைவிட்டு விலகுவது மில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை"** என்றவர் நம்மை ஒருநாளும் கைவிடுவதில்லை. நாம் நன்றாய் இருக்கும்பொழுது உலகமே நம் பின்னால் நம்மோடு நிற்கும். நாம் கண்ணீர் வடிக்கும் பொழுதோ நம் நண்பர்களும் சரி, உறவினர்களும் சரி, ஏன் நம் குடும்பத்தார் கூட ஒதுங்கிவிடுவார்கள். இதன் நிமித்தமாகவே நாம் துக்கத்தோடு இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிடுகின்றது. சோர்ந்து போகாதிருங்கள்! உங்கள் வியாதியின் மத்தியிலும், பிரச்சனைகளின் மத்தியிலும், கண்ணீரின் மத்தியிலும் அவர் உங்களோடு இருக்கிறார். நான் தவறுகளை அதிகமாய் செய்துவிட்டேனே, என்னை தேவன் அழிக்காமல் விட்டுவிடுவாரா என்று நீங்கள் கேட்கலாம். அப்படி தவறு செய்கிற அனைவரையும் அவர் அழித்து கொண்டிருந்தால் நாம் ஒருவர் கூட பிழைத்திருக்க முடியாது. ஆகவே உங்கள் தவறுகளை அவரிடத்தில் அறிக்கை செய்து மன்னிப்பு கேளுங்கள். அவர் உங்களை அழிக்காமல் உங்கள் மீது இரங்குவார். தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் தம்மிடத்தில் அவர்கள் திரும்பும்பொழுது அவர் நிச்சயம் அவர்களுக்கு இரங்கி அவர்களுடைய தேவைகளை சந்தித்து அவர்களை மறுபடியும் தூக்கி விடுகிறவராக இருக்கிறார்.

சாபத்திலிருந்து, பாவத்திலிருந்து, அக்கிரமத்திலிருந்து அவர் நம்மை நீதியின் பாதையில் கொண்டு போய் சேர்க்கிறார். பாதாள குழியில் விழாதபடி பாதுகாக்கிறார். இமைப்பொழுது தேவன் என்னை விட்டார் என்று நீங்கள் நினைத்தாலும் திரும்பவுமாய் அவர் உங்கள் மேல் உருக்கமாய் இரங்கி உங்களை நடத்துவார்.

**இமைப்பொழுது உன்னைக் கைவிட்டேன்; ஆனாலும் உருக்கமான இரக்கங்களால் உன்னைச் சேர்த்துக்கொள்வேன் - ஏசாயா 54: 7**

## உடன்படிக்கையை மறக்காதவர்!

நம்முடைய தேவாதி தேவன் தம்முடைய பிள்ளைகளோடுகூட உடன்படிக்கை செய்கிறவராக இருக்கிறார். அவர் ஒரு நாளும் நம்மை யாரோ ஒருவர்

போல நடத்துகிறவர் அல்ல. ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கையை அவனுடைய சந்ததிகள் தவறு செய்தாலும் அவற்றை நினைவுகூர்ந்து அந்த உடன் படிக்கையின் நிமித்தம் அவர்களை ஆசீர்வதிப்பதை பார்க்கிறோம். நம்முடைய ஆவிக்குரிய முற்பிதாக்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களுக்கு செய்த உடன்படிக்கையும், வேதத்தில் நாம் காணும் அனைத்து பக்தர்களுக்கும் செய்த உடன்படிக்கையையும் அவர் மறவாமல் நினைவுகூர்ந்து அதில் எழுதியிருக்கிறபடியே அவர்களை ஆசீர்வதித்தார். உதாரணமாக வேதத்தில் **ஆதியாகமம் 28:15** ஆம் வசனத்தில் நாம் பார்ப்போம் என்றால் அங்கே தேவன் யாக்கோபுக்கு செய்கிற உடன்படிக்கை என்ன?

**நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்தத் தேசத்துக்கு உன்னைத் திரும்பிவரப்பண்ணுவேன்; நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை என்றார்**

**- ஆதியாகமம் 28: 15**

நான் உனக்கு சொன்னதை செய்யுமளவும் நான் உன்னை கைவிடுவதில்லை என்கிறார்.

ஒரு சமயம் தேவனுக்கு பயந்த அருமையான குடும்பத்தினர் நீண்ட தூரப் பயணம் செல்ல வேண்டியிருந்தது. இரவு நேரமும் பயணித்தால் நாம் சீக்கிரமாக செல்ல வேண்டிய இடத்திற்கு சென்றுவிடலாம் என்று நினைத்து அவர்கள் இரவு நேரமும் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். எங்கும் பயங்கரமான இருள் காணப்பட்டது. இருப்பினும், இவர்கள் சந்தோஷமாக பாடல் பாடிக் கொண்டே சென்று கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில் திடீரென்று அவர்களுடைய கார் நின்றுவிட்டது. எவ்வளவோ முயற்சி செய்தும் அவர்களால் அந்த காரை மீண்டும் இயக்க முடியவில்லை. இரவு நேரத்தில் வெகு தூரம் சென்று உதவி தேடுவதற்கும் பயந்தனர். எனவே, சரி விடியும் வரையும் நாம் காரிலேயே அமர்ந்துவிடலாம் என்று அனைவரும் காருக்குள்ளேயே இருந்துவிட்டனர். அவர்களையும் அறியாமல் அயர்ந்த நித்திரை அடைந்துவிட்டனர். காலை விடிந்தவுடன் உதவி தேடி போகலாம் என்று நினைத்து ஒரு 10 அடி தூரம் நடந்து சென்ற பொழுது தான் மிகப்பெரிய அதிர்ச்சி அவர்களுக்கு காத்திருந்தது. ஏனென்றால் அந்த 10 அடி தூரம் அவர்கள் காரில் கடந்து வந்திருப்பார்கள் என்றால் மிகப்பெரிய நிலச்சரிவு குழியில் விழுந்திருப்பார்கள். கார் நின்று போனதினாலேயே அவர்கள் உயிர் தப்பினார்கள். ஆண்டவர் மிகப்பெரிய அழிவிலிருந்து பாதுகாத்தமைக்காக அவரை கர்த்தரை நன்றியோடு ஸ்தோத்தரித்தார்கள்.

ஆம் பிரியமானவர்களே தேவன் ஒரு நாளும் தம்முடைய பிள்ளைகளை மறக்கவே மாட்டார். நம்மேல் கண் வைத்து நம்மை பாதுகாத்து வழிநடத்துவார். நீங்கள் அறியாத ஆபத்துகளிலும் நீங்கள் கண்டிராத பாதைகளிலும் அவர் தம்முடைய உடன்படிக்கையை நினைத்து உங்களை நடத்திச் செல்லுவார்.

நீங்கள் நினைக்கலாம் தேவன் மறந்து விட்டாரே, எனக்கு வாக்குத்தத்தம் பண்ணினாரே என்று. ஆம்! வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர் அவர் நிச்சயம் நிறைவேற்றுவார். அவர் சொல்வதை நிறைவேற்றும் வரைக்கும் உங்களை கைவிட மாட்டார். யாக்கோபு தன்னந்தனியாக இருந்த பொழுது தேவன் அவனுக்கு வாக்குத்தத்தம் பண்ணினார். அவர் சொன்ன ஒரு காரியத்தை கூட அவர் நிறைவேற்றாமல் இருக்கவில்லை. அதே வல்லமையுள்ள தேவன் தாம் செய்வதை தான் உங்களுக்கும் சொல்லி இருக்கிறார். எனவே சோர்ந்து போகாமல் நம் தேவனை நேசித்து முன்னேறுவோம். அவர் உங்கள் வாஞ்சைகளையும், விருப்பங்களையும் நிறைவேற்றி பாதுகாத்து, சந்தோஷப்படுத்துவார்.

dranandastira@mojindia.org, margret@mojindia.org, joshua@mojindia.org, jane@mojindia.org, info@mojindia.org, sjsavestrust.in

வேலை வாய்ப்பு

☞ Video Editors தேவை ☞ கேமரா மேன் தேவை

Apply to :info@mojindia.org

# அடோநிராம் ஜட்சன்
# ADONIRAM JUDSON

அடோநிராம் ஜட்சன் 1788ஆம் ஆண்டு ஆகஸ்டு 9-ம் தேதிஅமெரிக்காவில் உள்ள மசாசூசெட்ஸ் என்ற இடத்தில் பிறந்தார். நல்ல கிறிஸ்தவ குடும்பத்தில் வளர்க்கப்பட்டவர், இவரது தகப்பனார் ஒரு போதகர். இவர் படிக்கும் பொழுது சக நண்பர்களுடன் சேர்ந்து தேவன் இல்லை என்ற முடிவுக்கு வந்து விட்டார். அச்சமயத்தில் வாலிப வயதில் கடவுள் இல்லை என்ற கொள்கையுடைய அந்த நெருங்கிய நண்பர் திடீரென்று இறந்து விட்டார். அதில் பயந்து போன இவர், இப்படி நாத்திகனாகவும் இல்லாமல் கிறிஸ்தவனாகவும் இல்லாமல் இரண்டாங்கட்ட நிலையில் Theological College at Andover என்ற இறையியல் கல்லூரியில் சேர்ந்தார். அங்கு சேர்ந்த இரண்டு மாதத்தில் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார். அந்த நேரத்தில் கர்த்தர் இவரோடு **"நீ கண்டிப்பாக என் பணிக்காக தூரமான கிழக்கு தேசங்களுக்கு போகவேண்டும்"** என்று கூறினார். அப்பொழுது திருமணம் செய்த நிலையில் ஊழியத்திற்காக இந்தியா வருகிறார். அவர் இந்தியா வரும் பொழுது வில்லியம்கேரி என்னும் மிஷனரியை சந்தித்து அவரிடம் அநேக காரியங்களை கற்றுக் கொண்டார்.

தேவ அழைப்பை பெற்ற ஜட்சனும் அவரது மனைவியும் கேரவன் என்னும் கப்பலில் ஏறினார்கள். அவர்களுக்கு தாங்கள் எங்கு பணிசெய்யப் போகிறோம் என்று தெரியாது. முடிவில் பர்மா சென்றடைந்தனர். அங்கு சில காலம் ஊழியம் செய்து விட்டு அமெரிக்கா சென்று திரும்ப வந்து ஊழியப் பணிகளை துவங்கினார். 1824ல் பர்மாவிற்கும் இங்கிலாந்து தேசத்திற்கும் போர் வந்த பொழுது இவரை சிறையில் போட்டு விட்டார்கள். அந்த சமயத்தில் இவரது மனைவி பயங்கரமாக போராடி, அனாதைகளை வளர்த்துக் கொண்டு, சிறையில் இருக்கும் தன் கணவரையும் அவ்வப்பொழுது பார்த்துக் கொண்டு மிகவும் கஷ்டப்பட்டார்கள். கடைசியில் அவர்களது விடாமுயற்சியினால் ஜட்சன் சிறையிலிருந்து விடுதலையானார். பர்மாவிற்கும் இங்கிலாந்து தேசத்திற்கும் ஜட்சனே சமாதான பேச்சு வார்த்தையை நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.



ஜட்சன் சிறையில் இருந்து வெளியே வந்த ஒரு வருடத்தில் அவரது மனைவியும், குழந்தைகளும் இறந்து போனார்கள். அந்த துக்கத்திலிருந்து அவரால் வெளியே வர முடியவில்லை. எனவே, அவர் மிகவும் சோர்ந்து போய் அடர்ந்த புலிகள் நடமாடும் காட்டிற்குள் ஒரு குடிசையை போட்டுக் கொண்டு அங்கே சாவை எதிர் நோக்கி வாழ்ந்து வந்தார். எல்லாரும் அவர் இறந்துவிடுவார் என்று கருதினார்கள். பிறகு அந்த காட்டை விட்டு வெளியே வந்து பர்மாவில் உள்ள கேரன் என்கிற மலைவாழ் மக்கள் மத்தியில் ஊழியம் செய்தார். அதற்கு பிறகு அவர் மறுமணம் செய்து ஊழியத்தை தொடர்ந்தார்.

ஜட்சன் பர்மாவில் 38 வருடங்கள் கர்த்தருக்காக உழைத்தார். மியான்மர் தேசத்தில் அநேகம் பேரை ஆண்டவருக்கென்று ஆயத்தப் படுத்தினார். ஓ! ஆச்சரியம் கர்த்தர் ஏற்கனவே செய்து விட்டார் என திரு. ஜட்சன் ஆச்சரியப்படுவார். 7000 பர்மா மக்கள் கர்த்தரை அறிந்து, ஞானஸ்நானம் பெற்றார்கள். 163 மிஷனெரிகள், அங்குள்ள போதகர்கள் மற்றும் உதவியாளர்களின் துணையோடு 63 பிரார்த்தனைக் கூடங்கள் நிறுவப்பட்டன.

ஜட்சன் அவர்கள் முழு வேதாகமத்தை பர்மீய மொழியில் மொழி பெயர்த்து, அச்சடித்து விநியோகம் செய்தார். முதல் பாலி - பர்மீய அகராதி, ஆங்கிலம்-பர்மீய அகராதி, அதேபோல் பர்மீய - ஆங்கில அகராதிகளை தயாரித்து வெளியிட்டார். மேலும் ஏராளமான கைப்பிரதிகளையும் உருவாக்கினார்.

பிப்ரவரி 19, 1812-ல் திரு.ஜட்சன் அவர்களே பர்மாவின்முதல் அமெரிக்க மிஷனெரியாயிருந்தார். 36 வருடங்கள் கழித்து, அவரை உதாரணமாகக் கொண்டு உலகமெங்கும் 1000 அமெரிக்கர்கள் மிஷனெரிகளாக சென்றனர்.

# அன்பரின் ஊழியத்தின் மூலம் நடைபெற்ற விடுமுறை வேதாகமப்பள்ளியில் கலந்து கொண்ட பிள்ளைகள்


















❖ பிரான்ஸ் நாட்டில் தேசிய தின கொண்டாட்டங்கள் வண்ணமயமான வான வேடிக்கையுடன் நிறைவு பெற்றது. பாரீஸ் நகரில் உள்ள பஸ்தி என்ற சிறைச்சாலை மக்கள் புரட்சி மூலம் தகர்க்கப்பட்டு 1789ஆம் ஆண்டு ஜுலை 14ம் தேதி மன்னர் ஆட்சி தூக்கி எறியப்பட்டது. இந்த வரலாற்று சிறப்பு மிக்க நாள் பிரான்ஸ் நாட்டில் தேசிய தினமாக கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டுக்கான தேசிய தின கொண்டாட்டங்கள் பாரீஸ் நகரத்தில் ராணுவ அணிவகுப்புடன் தொடங்கின. முப்படை வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை அதிபர் இமானுவேல் மேக்ரானும், பிரதமர் ஜீன் கேஸ்டெக்ஸ் ஏற்றுக் கொண்டனர். பிரான்ஸ் நாட்டு விமானப்படையின் சாகசங்கள் கண்களை கொள்ளை கொண்டன.

❖ ஆந்திர மாநிலம் கர்நூல் மாவட்டத்தில் விவசாயி ஒருவர் 30 கேரட் வைரத்தை தனது விளைநிலத்தில் மீட்டு 1.2 கோடி ரூபாய்க்கு விற்று விட்டதாக கூறப்படும் தகவல் பரபரப்பை ஏற்படுத்தி யுள்ளது. கர்நூல் மாவட்டத்தில் உள்ள ஜொன்னகிரி, துக்கிலி, மடிகேரா, பெகதிராய், பேராபலி, மஹாநந்தி மற்றும் மஹாதேவபுரம் கிராமங்களில் உள்ள வயல் பகுதிகளில் மழைக்கு பின்னர் வைரக்கற்கள் தானாகவே வெளியே வரும் என அப்பகுதி மக்கள் நம்புவதாக கூறப்படுகிறது. அந்த வகையில் 2019ம் ஆண்டில் விவசாயி ஒருவர் 60 லட்சம் ரூபாய் மதிப்பிலான வைரத்தையும், கடந்த ஆண்டு இரண்டு விவசாயிகள் இரண்டு விலை மதிப்பற்ற வைரகற்களையும் கண்டு பிடித்து உள்ளூர் வணிகர்களிடம் நல்லதொகைக்கு விற்று விட்ட தாகவும் கூறப்படுகிறது. அதேசமயம் விலை மதிப்பற்ற வைரக்கற்களை மீட்ட உண்மை சம்பவங்களை இதுவரை கேள்விப் பட்டதில்லை என்று அப்பகுதி போலீசார் தெரிவிக்கின்றனர்.

❖ தூத்துக்குடி வ.உ. சிதம்பரனார் துறை முகத்துக்கு இந்திய கடற்படைக்குச் சொந்தமான அதிநவீன நீர்மூழ்கிக் கப்பலான **"சிந்துஷாஸ்ட்ரா "என்ற** நீர்மூழ்கிக் கப்பல் வருகை தந்திருக்கிறது. இந்த கப்பலின் வருகை, தென்னிந்திய கடலோரப் பாதுகாப்பை பலப்படுத்தும் வருகையாகப் பார்க்கப்படுகிறது.



❖ மூன்றாம் அலையைப் பற்றிய பல்வேறு தகவல்கள், கணிப்புகள் வெளிவந்து கொண்டிருக்கும் சூழலில் அடுத்த 100 நாள்கள் முக்கியமானவை என்று மத்திய அரசின் அங்கமான நிதிஆயோக்கின் சுகாதாரத்துக்கான உறுப்பினர் வி.கே.பால் தெரிவித்துள்ளார்.

❖ இந்நிலையில் தடுப்பூசி போடாதவர்கள் மூன்றாம் அலையில் அதிகம் பாதிக்கப்படுவார்கள் என்று அமெரிக்காவின் நோய் கட்டுப்பாடுமற்றும் தடுப்பு அமைப்பு எச்சரித்துள்ளது. இது தொடர்பாக மருத்துவர் ரோஷல் வெள்ளை மாளிகையில் அளித்த பேட்டியில் "நாட்டில் எந்தப் பகுதியிலெல்லாம் குறைவான எண்ணிக்கையிலானவர்கள் தடுப்பூசி செலுத்திக் கொண்டார்களோ அந்தப் பகுதியிலெல்லாம் நோய்த்தொற்றால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அதிகமானோர் தடுப்பூசி செலுத்திக் கொண்ட பகுதிகளில் பாதிப்பு குறைவாக உள்ளது.

❖ தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்கள் மத்தியில் லேசான பாதிப்பு, தீவிர பாதிப்பு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதி, உயிரிழப்புகள் போன்றவை தொடரவே செய்யும். மூன்றாம் அலை என்பது தடுப்பூசி போட்டுக் கொள்ளாதவர்களுக்கான பெருந்தொற்றாகவே அமையும். இதில் நல்லசெய்தி என்னவென்றால் முழுவதுமாக தடுப்பூசியைச் செலுத்தினால் தீவிரகோவிட் பாதிப்பு, மருத்துவ மனையில் அனுமதி, உயிரிழப்பு ஆகியவற்றைத் தடுக்கமுடியும். தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களுக்கு நிச்சயம் இது நல்லசெய்தி.

❖ ஏற்கனவே பரவியிருக்கும் உருமாறிய வைரஸ், டெல்டா வேரியன்ட் அனைத்துக்கும் எதிராகவும் தடுப்பூசி செயல்படுகிறது. நீங்கள் தடுப்பூசி போட்டுக் கொள்ளவில்லை என்றால் நிச்சயம் ஆபத்தானவர்கள் பட்டியலில் இருக்கிறீர்கள்" என்று தெரிவித்துள்ளார்.

Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2019-2021 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month

நாகர்கோவிலில்

## பங்காளர்களுக்கான தனிஜெபம்

Dr. ஆனந்தஸ்திரா அவர்களை சந்திக்க ஓர் அரிய வாய்ப்பு



நாள் : 2021 ஆகஸ்ட் 14 சனிக்கிழமை

நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை

இடம் : விஜயதா மினி ஹால்
W.C.C. ரோடு,
நாகர்கோவில்

தொடர்புக்கு : (0431) 2765386, 82203 17472 & 94889 08328




## தனி ஜெபம் மற்றும் ஆலோசனை

Dr. ஆனந்த ஸ்திரா மற்றும் அவர்கள் குடும்பத்தினரை
சந்தித்து ஜெபிக்க விரும்புகிறவர்கள்
கீழ்க்கண்ட அலைபேசியில் முன் அனுமதி பெற்று வருமாறு
கேட்டுக் கொள்கின்றோம்.

செல் : 80987 42638 & 94888 45627

Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,

# அன்பரின் ஊழியம்

# ANBARIN OOZHIYAM

மலர்:7 இதழ்:8 ஆகஸ்ட் 2021 தனிபிரதி- ரு.20/- ஆண்டு சந்தா- ரு.200/-
VOL:7 ISSUE NO : 8 August 2021 Single Copy - Rs 20/- ANNUAL SUBSCRIPTION: RS 200/-



## என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது

சங்கீதம் 31:15